பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 18 திங்கட்கிழமை 03.07.2023 கதிர் 234

# கூட்டமைப்பு என்ற பெயரை ஜனநாயக தேசிய கூட்டணி பயன்படுத்துவதற்குத் தடை

## தேர்தல்கள் திணைக்களம் போட்டது முட்டுக்கட்டை

(அரசியல் செய்தியாளர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.ஏ) என்ற பெயரைக் கைப்பற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்திருக்கிறது. அந்தப் பெயரைக் கூட்டணி பயன்படுத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு மறுப்புத் தெரிவித்துவிட்டது.

புளொட் அமைப்பைச் சேர்ந்தவரான ஆர்.ராகவனை செயலாளராக்கொண்டு பதிவு செய்யப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைத் தமது புதிய கூட்டாக ஆக்கிக்கொண்டன ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறிவிட்டதாகத் தாமாகவேஅறிவித்தரெலோமற்றும்புளொட் ஆகியன மற்றைய மூன்று கட்சிகளையும் இணைத்துக்கொண்டு தாமே தமிழ்த் ☞2



## இது ரகசியம் அல்ல!

அண்மையில் மகிந்த ராஜபக்சவின் விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது மகிந்த மற்றும் ஷிரந்தியின் திருமண நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. அரசியல் குழப்பங்கள் நிகழ்ந்து முடிந்த சிறிது காலத்தின் பின்னர் நடக்கும் விருந்து என்பதால் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும்அழைக்கமஹிந்தஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் இடம்பெற்றசிலநிகழ்வுகளின்அடிப்படையில் ராஜபக்ச குடும்பத்திற்குள் சில பிளவுகளும், மனக்கசப்பும் விரிசல்களும் தொடர்ந்து நிலவிவந்தன. குறிப்பாக கோட்டாஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறி ஓடியதன் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களால் இந்த நிலைமை மோசமாகியது. அனைத்து ராஜபக்ச குடும்பமும் ஒன்று சேர்ந்ததற்கான வாய்ப்புகள் இல்லாத அளவுக்கு நெருக்கடி கடுமையாகிவிட்டது.

அதன் பின்னர் மகிந்த குடும்பத்தில் நிகழ்ந்த சில நிகழ்வுகளுக்கு கோட்டாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என ☞2

## எதிர்காலத் திட்டங்கள் மிக ஆபத்தானவைகள்

### சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. தெரிவிப்பு

அரசாங்கம் தமது நண்பர்களை பாதுகாத்துள்ளது. இதனை அடுத்து எதிர்வரும் காலத்தில் அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கும். அது மிகவும் ஆபத்தானதாக இருக்கும் இருப்பினும் அரசாங்கத்திற்கு மாற்றுத்திட்டமொன்று இல்லை என்று, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பெலவத்தவில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே ☞2

## கரும்புச் செய்கை, சீனித் தொழிற்சாலையால்

# வவுனியாவுக்கு மட்டுமல்ல முல்லைத்தீவுக்கும் பாதிப்பு

### எதிர்த்து இரு இடங்களிலும் போராட்டம் என்கிறார் ரவிகரன்

ந.லோகதயாளன்.

வவுனியா வடக்கு பகுதியில் கரும்புச்செய்கை அனுமதிக்கப்பட்டால் வவுனியா மாவட்டம் அல்லாது முல்லைத்தீவு மாவட்டமும் அழிவடைவதைத் தடுக்க முடியாது. எனவேஇந்தப்பாதகச்செயலை மேற்கொள்ள எவருமே துணை போகக்கூடாது.

இந்தத் திட்டத்திற்கு எதிராக விரைவில் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போராட்டங்களில் ஈடுபடுவோம்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் காலைக்கதிர் பத்திரிகைக்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் மாகாண சபையாக நாம் இத்தகைய திட்டங்களைத் தடுத்து நிறுத்தினோம். துரதிஸ்டம் என்னவெனில் அன்று எம்மோடு சேர்ந்து திட்டத்தைத் தடுத்து நிறுத்துவதாக குரல் கொடுத்த சிலரும் இன்று இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் துடிக்கின்றனர். அவர்களை மக்கள் நன்கு அறிந்துகொள்ளவேண்டும்.

வவுனியா வடக்கில் 30 ஆயிரம் கெக்டேயர் அல்லது 74 ஆயரம் ஏக்கரில் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்பட்டு ☞2

## மற்றொரு மோசடியில் ஈடுபட ஆட்சியாளர்களுக்கு அனுமதி

### சாடுகின்றார் உதய கம்மன்பில எம்.பி

இந்த ஆட்சி மற்றொரு மோசடியில் ஈடுபட நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளதென பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுருஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய கடன் மறுசீரமைப்பு தீர்மானத்துக்கு தாம் ஏன் வாக்களித்தோம் என்பதை பொதுஜன ☞2

## இரத்மலானை – யாழ். இடையே மீண்டும் விமான சேவை ஆரம்பம்

இரத்மலானைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பயணிகள் விமான சேவை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

இரத்மலானையிலிருந்து ஒரு மணி நேரம் பத்து நிமிட விமானத்தில் யாழ்ப்பாணத்தை அடைய முடியுமென இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த போக்குவரத்து சேவை வாரத்தில் நான்கு நாட்கள் முன்னெடுக்கப்படும் என்றும், சனி, ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் காலை வேளைகளில் விமானங்கள் இயக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பன்னிரண்டு பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய செஸ்னா 208 என்ற சிறியரக விமானம் நேற்றையதினம் இந்தப் பயணத்தில் முதன் முதலாக ஈடுபட்டது. ☞2

## ஆட்சியாளர்களின் தீர்மானம் ஜனரஞ்சகமானதாக இல்லை

### இப்படிச் சொல்கிறார் நாமல்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பிரேரணை ஜனரஞ்சகமானதாக இன்மையினாலே வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்று ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான வாக்கெடுப்பில் பங்கேற்காமை தொடர்பில் நருத்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும், ஆனால்அவைஜனரஞ்சகமாக இருக்கவேண்டும். அவ்வாறு இல்லையேல் அவற்றை அமுல்படுத்துவதில் பயனில்லை.

இவ்வாறான தீர்மானங்கள் தொடர்பில் மக்களுக்கு உண்மைகள் விளக்கப்பட வேண்டும். ஆனால் அவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. கடன் மறுசீரமைப்பு செய்யப் பட வேண்டும், ஆனால் அது நியாயமாக செய்யப்படவேண்டும் - என்றார்.

## மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க அரசிடம் புதிய வேலைத் திட்டம்

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல

மருத்துப் பொருட்களுக்கான தற்பாடு ஏற்படாமல் இருப்பதற்கும் மருந்துப் பொருட்களின் பெறுகை செயற்பாடுகளை செயல் திறன்மிக்கதாகமுன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்‘தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் மருத்துவத்துறை பற்றிய அவதானம் தற்காலத்தில் ☞2

## ஜனநாயகத்திற்கே அச்சுறுத்தல் சாடுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

தேசிய கடன்மறுசீரமைப்புக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் மூலமாக நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநாகர சபையின் மேயர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றபோதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியகடன்மறுசீரமைப்புக்கான பாராளுமன்ற விவாதத்தின்போது எதிர்க்கட்சியின் 7 உறுப்பினர்களுக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்காது நாடாளு ☞2

## இனிமேல் எதையும் கூறமுடியாது சாகல மஸ்கெலியவில் ஆவேசம்

இனிஎவருக்கும்எதனையும் கூற முடியாது என்று ஜனாதிபதிபணிக்குழாம்பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகலரத்நாயக்கதெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின்மக்கள்சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியில்ஒருராகவேநாடாளுமன்றத்திற்கு பிரவேசித்தார். தற்போது ஜனாதிபதியாக உள்ளார். நாட்டின் எதிர்காலம் கருதி ஏனைய அரசியல்கட்சிகளுடன்இணைந்து செயற்படுவதற்குதயராகியுள்ளார். அதற்காக அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு ☞2

## பிரபாகரன் இறந்தாரா என்றுகூட மைத்திரிபாலவுக்கு தெரியாதாம்

### யாழ்ப்பாணத்தில் அவரே சொன்னார்

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இறந்தாரா என்பதுகூட எனக்குத் தெரியாது. அவரது மரபணு பரிசோதனை தொடர்பாக என்னிடம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அது பற்றித் தனக்கு யாரும் எதுவும் சொல்லவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாள் பயணமாக வந்திருந்த மைத்திரிபால சிறிசேன, இங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்துகொண்டார். அவரது பயணத்தின் இறுதி நாளான நேற்று, நல்லூரில் உள்ளஷசிறிலங்காசுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, புலிகளின் தலைவர் பிரபாகரனின் இறப்பைஉறுதிப்படுத்துவதற்கான மரபணு சோதனை அறிக்கையை அரசு ஏன் வெளியிடமறுக்கின்றதுஎன்று கேள்விஎழுப்பினார். அதற்குப் பதிலளித்த மைத்திரிபால, இறுதிப் போரின் சில வாரங்கள் மட்டுமே தான் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தார் என்றும் அதனால் தனக்கு ☞2

## நாடாளுமன்றத்தை உடன் கலைத்துவிட்டு மக்கள் ஆணை பெற்று ஆட்சியமைக்குக

### பேராயர் மல்க்கம் ரஞ்சித் வேண்டுகோள்

நாடாளுமன்றத்தை உடன்கலைத்துவிட்டுமக்கள் ஆணைபெற்று மீண்டும் ஆட்சியமையுங்கள் என்று கொழும்புபேராயர்கர்தினால் மெல்கம்ரஞ்சித் ஆண்டகை அனைத்து அரசியல் தரப்பினரிடத்திலும் சவால் விடுப்பதாக அறிவித்துள்ளார்.

சரக்குவபகுதியில்நேற்று-நடைபெற்றஆராதனைகளின் பின்னர் சொற்பொழிவாற்றுகையிலேயேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசியகடன்மறுசீரமைப்புக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த அங்கீகாரத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை கிடையாது.

இந்நிலையில், ஜனாதிபதிக்கு அல்லது நிதி அமைச்சருக்கு நிதியை கையாள்வதற்கான எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது மக்கள் ஆட்சித் தத்துவத்திற்கு எதிரானதாகும்.

ஆகவே, நாடாளுமன்ற ஆசனங்களில் உள்ளவர்கள் முடியுமானால் மீண்டும் அதிகாரங்களைப் பெற்று அந்த ஆசனத்தில்அமருமாறு சாவால் விடுகின்றேன். அதாவது, மக்கள் ஆணைப் பெற்று மீண்டும் ஆட்சியை முன்னெடுக்குமாறு கோருகின்றேன்.

டிக்கோவிட்டவுக்குதுறைமுகத்தினை விஸ்தரிக்கப் போவதாக ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டார். அப்படியென்றால்கொழும்புத் துறைமுகத்தினை என்ன செய்யப்போகின்றார்.

உண்மையில் அவர் நடைபெறமுடியாத விடயங்கள் தொடர்பில் கனவு காண்கின்றார். டிக்கோவிட்டவுக்கு துறைமுகம் அமைவதால் முத்துராஜவெல, பமுனுகம கடற்கரைப்பகுதியின் இயற்கை வளங்கள் ☞2

## மத்திய வங்கியின் ஆளுநர் உண்மையைக் கூறவில்லை

மத்திய வங்கியின் ஆளுநர் நாட்டு மக்களுக்கு உண்மையைக்கூறவில்லை. இதன் மூலமாக, ஊழியர் சேமலாபநிதியத்தின் உரிமையாளர்களுக்கு தமது கருத்துக்களைகூறுவதற்குகூட இடமளிக்கப்படவில்லை. இந்த நாட்டு மக்கள் முழுமையாக ஒதுக்கப்பட்டே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில், வெளிநாட்டில் இருக்கும் ராஜபக்ஷ குடும்பத்தின் சகோதரி ஒருவர் வந்ததை அடுத்துவிருந்துஒன்றுஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்நிகழ்வில் மகிந்தவைத் தவிர ஏனைய அனைவரும் கலந்துகொண்டிருந்தனர். அதுமட்டுமல்லாமல் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் இலங்கை வந்தபோது மகிந்தவுடன் சந்திப்புஒன்றுஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது. அதில் மகிந்த தவிர கோட்டா மாத்திரமே பிரசன்னமாகியிருந்தார். இப்படிகடந்தஒருவருடகாலத் தில் ராஜபக்ச குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடிய சந்தர்ப்பங்கள் வாய்த்திருக் கவில்லை. மகிந்த - ஷிராந்தி திருமணவருடாந்தநிகழ்விற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும், பசிலை அன்றைய விருந்தில் காணவில்லை. கோட்டா, அனோமா இல்லாமல் தனியாக இருந்தார். நீண்ட நேரத்தின்பின்னரே கோட்டா மஹிந்தவின் வீட்டிற்கு வந்தார். கோட்டாவந்தபோதும் அவரை வழக்கம்போல் யாரும் பெரிதாகக் கருதவில்லை. கோட்டாவைஎதிர்கொள் ளாமல்எத்தனைபேர்தவிர்த் தார்கள்என்பதும்தெரிந்தது. இதனைஉணர்ந்தகோட்டா, விரைவில் இரவு உணவை உண்டுவிட்டுவிஜேராமவை விட்டுவெளியேறப்பார்த்தார். ஜனாதிபதியாக கோட்டா பதவியேற்றஉடனேராஜபக்ச குடும்பத்தினர் எடுத்த ஊடகங்களில் வெளியிட்ட அந்தப் பிரபலமானசெல்பிஇன்னும் மக்களின்மனதில்நிழலாடக் கூடும். அதில் ராஜபக்ச குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாகஇருந்தார்கள். இன்று அந்த குடும்பத்துக்குள் கோட்டாதேடுவாரற்றஒருவரா கிவிட்டார். இதைத்தான் கலிகாலம் என்பார்களோ!

இதற்கிடையில், கோட்டா தாய்லாந்துமற்றும்லாவோஸ் ஆகிய நாடுகளுக்கு செல்லச் திட்டமிட்டுள்ளார். அது பிக்னிக்கா அல்லது மத யாத்திரையா என்று தெரியவில்லை.

இடிமின்னல்
(idiminnal23@gmail.com)

## எதிர்காலத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கி விநியோகித்த திறைசேரிப் பத்திரங்களே தற்போது நிரந்தரமான முறிகளாக மாற்றப்பட்டுள்ளன, ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்டவையும் இந்தத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

வெளிப்படைத் தன்மையை பேணி கடன் மறுசீரமைப்புஉள்ளிட்டநடவடிக்கைகளை கடன்வழங்குநர்களுடன் பேச்சுநடத்தி முன்னெடுப்பதாகஅரசாங்கம் சர்வதேசநாணயநிதியத்துக்கு கூறி இணக்கப்பாட்டை எட்டியுள்ளது. எனினும், அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

தேசிய கடன் சீரமைப்புக்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் முறிகளைக் கையாளும் அதிகாரத்தினை நிதி அமைச்சரின் கீழ் கொண்டு வந்துள்ளது.

இலங்கையில்பதினொரு நிறுவனங்கள்முறிகள்தொடர்பில்செயற்பட்டுவருகின்றன. அதில்அர்ஜுன்மகேந்திரனின் மருமகனின் உடைய ; பேர்ப்பச்சுவல் டெசரீஸும் உள்ளடங்குகின்றது. இதே நேரம், ஊழியர் சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு 9 சதவீதம் வட்டி வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் அரசாங்கம் நியாயமாக நடைபெறவில்லை. அரசாங்கம் தமது நண்பர்களை பாதுகாத்துள்ளது. இதனை அடுத்து எதிர்வரும் காலத்தில் அடுத்தகட்டசெயற்பாடுகளை முன்னெடுக்கும். அதுமிகவும் ஆபத்தானதாக இருக்கும் இருப்பினும்அரசாங்கத்திற்கு மாற்றுத்திட்டமொன்று இல்லை - என்றார்.

## கூட்டமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக்கூட்டமைப்புஎன்றும் கூறிவந்தன. அதேநேரம் அழைப்பு விடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணிஎன்கிறபதிவுசெய் யப்பட்ட கூட்டு அரசியல் அணியில் இணைந்து கொண்டன. ஆங்கிலத்தில் டிரினன்ஏ என்று வரக்கூடிய இந்தக் கூட்டணியின் ஆங்கிலப் பெயரில் டி என்ற எழுத் தைச்சிறிதாக்கிவிட்டு ரினன்ஏ என்ற மீதியைப் பெரிதாக்கி தாமேதமிழ்த்தேசியக்கூட்ட மைப்பு என்று மக்களை மாயைக்குள் தள்ளுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. இந்த நிலையிலேயே தமது கூட்டின் பெயரில் உள்ள ஜனநாயகத்தைநீக்கிவிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்றபெயரிற்கானஆங்கிலப் பதமான ரினன்ஏ (TNA) என் பதைப் பயன்படுத்த அனுமதிக்கும்படி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்திருந்தனர். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் ஆங்கிலத்தில்ரினன்ஏஎன்றே பயன்படுத்தி வந்தது. தமது கூட்டணிக்கு அந்த ஆங்கிலப் பெயரைப் பதிவுப் பெயராக எடுத்துவிட்டால் அதுதமிழ்த் தேசியக்கூட்டமைப்புஎன்கிற ஒற்றுமைப்பாட்டை ஏற்படுத் தும் என்கிற அடிப்படையில் இந்த விண்ணப்பம்செய்யப் பட்டிருந்தது.

ஜனநாயகக் கூட்டணியின் இந்த விண்ணப்பம் 2023 மே 30 நடந்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் கூட்டத் தில் ஆராயப்பட்டது. இதே பெயரில் வேறு கட்சி நீண்ட காலமாக இயங்குவதனால் இந்தச் சொல்லாடல் இடம்பெறும் வகையிலான பெயரிற்கு அனுமதிக்க முடியாது என தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்து குறித்த கட்சிக்கு தற்போது எழுத்தில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஎன்கிறபெயரை யோ அல்லது ரினன்ஏ என்கிற பெயரையோ பயன்படுத்த முடியாது.

## இனிமேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளார்.

ஆனால், எதிர்க்கட்சிகள் தமது அரசியல் இலாபத்தை மையப்படுத்தி தவறான பிரசாரத்தினை மேற்கொள்கின்றன. குறிப்பாக, தேசிய கடன் மறுசீரமைப்புச் செய்யப்பட்டால்ஊழியர்சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் என்பன இல்லாது போகும் என்றார்கள். ஆனால் ஜனாதிபதி கடன்மறுசீரமைப்பு செயற் றிட்டத்தினை தெளிவாக முன்வைத்தமையால் எதிர்க்கட்சியினரது பொய்யான கருத்துக்கள் அம்பலமாகியுள்ளன.

அதேநேரம், எதிர்க் கட்சிகளுக்கு தற்போது சொல்வதற்கு எதுவுமில்லை. அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்றத்தில் எவரும் இருக்கவில்லை. ஆகவே இனியும் அனைத்துக்கும் பதிலளித்துக்கொண்டு இருக்க முடியாது. எதனையும் அவர்களுக்கு கூறமுடியாது. எதிர்காலம் நோக்கிய பயணத்தை ஜனாதிபதி தலைமையில் முன்னெடுப்பதற்கு அனைவரும் கைகொடுங்கள். எதிர்கால சந்ததிக்காக செயற்படுவோம் - என்றார்.

## மத்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார், அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஶ்ரீலங்கா பொதஜன பெரமுவின் முக்கிய மான உறுப்பினர்கள் சிலர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது சபையில் இருக்கவில்லை. அந்தப் பிரேரணை தமது மனச்சாட்சிகளுக்கும், தனித்துவத்திற்கும் பொருந்தாது என்று அவர்கள் நம்பியுள்ளனர்.

இந்தப் பிரேரணை தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே இரட்டை நிலைப்பாடே காணப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி.நந்தலால் வீரசிங்க கடன்மறுசீரமைப்புதொடர்பில் முழு நாட்டுக்குத் தெளிவு படுத்தியிருந்தாலும் அதில் எந்த உண்மைகளும் இல்லை. அவர் கூறுவது கற்பனைக் கதையாகும்.

உண்மையான கதை வேறொன்றாகவே உள்ளது. குறித்தவிடயத்தின்ஊடாகநிதி அமைச்சருக்குமுழுஅதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக நிதி அமைச்சரே கடன் மறுசீரமைப்புக்கான அமைச்சரவை அனுமதிப் பத்திரத்தினை வழங்கியுள்ளார். அந்தப் பத்திரத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் ஊடாக,அவருக்கேஅனைத்து உரிமைகளும் வழங்கப் பட்டுள்ளது.

உதாரணமாக, பிணை முறிகளின் கால எல்லை முடிவடைகின்றது என்றால் அதனைநீடிப்பதாஇல்லையா என்ற தீர்மானம் எடுக்கும் முழு உரித்தும் நிதி அமைச்சருக்கேஉள்ளது.சுருக்கமாகக் கூறப்போனால் பிணை முறிகள்தொடர்பில்தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நிதி அமைச்சரிடத்தில் சென்றுள்ளது. இதுபோன்றே ஏனைய விடயங்களிலும்நிலைமைகள் உள்ளன.

இந்த விடயத்தினை மத்திய வங்கியின் ஆளுநர் மறைத்துவிட்டார். அவர்நாட்டு மக்களுக்கு உண்மையைக் கூறவில்லை.இதன்மூலமாக, ஊழியர்சேமலாபநிதியத்தின் உரிமையாளர்களுக்குதமது கருத்துக்களை கூறுவதற்கு கூட இடமளிக்கப்படவில்லை. இந்தநாட்டுமக்கள் முழுமையாக ஒதுக்கப்பட்டே தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தினை அறிந்து எதிர்க்கட்சித் தலைவர் நிதிக்குழுவிற்குச்சென்று கேள்விகளைத் தொடுப்பதற்குத் தயாராகியபோது அவருக்கு கருத்துக்களை வெளியிட முடியாது என்று தீர்மானிக்கப்பட்டது.

உலகில் எந்தவொரு நாடாளுமன்றத்திலும் இவ்வாறான செயற்பாடு நடைபெற்றதில்லை. அரசாங்கம், ஐந்துநாட்கள் விடுமுறையைப்பயன்படுத்தி மக்களை ஏமாற்றி தமது தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இந்த விடயத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கம் உண்மையில் தமது பெரும்பான்மையைப் பயன்படுத்தி பாரிய தாக்குதல் ஒன்றை தேசிய கடன் மறுசீரமைப்பு ஊடாக மக்கள் மீது செய்துள்ளனர் -என்றார்.

## இரத்மலானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஃபிட்ஸ் ஏவியேஷன் ஃ டேவிட் பீரிஸ் ஏவியேஷன் ஆகிய நிறுவனங்கள் இந்த பயணிகள் போக்குவரத்திற்காக விமானங்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதோடு, இந்த விமானத்தில் பயணிக்கும் பயணிகள் ஏழு கிலோ அளவான பொருட்களை கொண்டு செல்ல முடியும் எனவும், அது யாழ்ப்பாணம் சென்று வருவதற்கும் வசதியாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனநாயகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தினை 7.30மணிக்கு சபாநாயகர் நிறுத்தியுள்ளார்.

இதன்மூலம் அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து வெயிளிடும் சுதந்திரத்தினை மறுதலித்துள்ளார். உண்மையில் அவராக இந்த முடிவினை எடுக்கவில்லை. அவர் பிறிதொருவரின் அறிவுறுத்தலிலேயே இந்த முடிவினை எடுத்துள்ளார்.

சபாநாயகர் என்பவர் பக்கச்சார்பற்றவராக அனைத்துக்கட்சிகளுக்குமானசபாநாயகராக இருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை என்பதுவருத்தமளிக்கன்றது.

இதேநேரம்,தேசியகடன் மறுசீரமைப்புக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன்ஊடாக, அனைத்து அதிகாரங்களும் நிதிஅமைச்சரிடத்தில்குவிக்கப் பட்டுள்ளது. இது நாடாளுமன்றத்தின் நிதி தொடர்பான உரித்துக்கு சாவால்களை ஏற்படுத்துவதாகும். அதுமட்டுமன்றி நாடாளுமன்ற ஜனநாயகத்தினையும் கேள்விக்குட்படுத்துகின்றது - என்றார்.

## மற்றொரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அறியாமல் உள்ளார்கள். நாடாளுமன்ற பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு அமைய செயற்படுகிறார்கள்.

தேசிய கடன் மறுசீரமைப்புக்கான தீர்மானங்கள் எடுக்கும் சகல அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. தேசிய கடன் எந்த வகையில் மறுசீரமைக்கப்படும் என்பது தொடர்பான திட்டம் அமைச்சரவை கொள்கை பத்திரத்தில் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்எனசட்டமாஅதிபர் கடந்த மாதம் 27ஆம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகள் புறக்கணிக்கப் பட்டுள்ளன. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித சட்ட உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் இந்த பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும்.

அரசாங்கத்தின்பிறிதொரு மோசடிக்கு அமைச்சரவை ஊடாக அனுமதி வழங்கப் பட்டுள்ளது. தேசிய வளங்களை பாதுகாக்கும் பொது ஜனபெரமுனவின்கொள்கையை ஜனாதிபதி இல்லாதொழிக்கிறார்.நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பு எதிர்வரும் காலங்களில் பாரிய மாற்றம் ஏற்படுத்தும் - என்றார்.

## வவுனியாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை சீனியாக்குவதற்காக 500 ஏக்கரில் சீனித் தொழிற்சாலையினையும் அமைப்பதானது அந்த மாவட்டத்திற்கு மட்டுமல்ல அதன் எல்லையில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத் திற்கும்பாதிப்பைஏற்படுத்தும்.

இந்தக்கரும்புச்செய்கைக்காக வவுனியா வடக்கில் தற்போதுள்ள இராமன்குளம், கொட்டோடைக்குளம், ஒயா மடுக்குளம்,வெள்ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக் கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ் சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம் ஆகிய 10 பெரியகுளங்களையும்அவற்றின் கீழ் வரும் சிறிய குளங்கள் மற்றும் இவற்றின் கீழான வயல் நிலங்களை உள்ளடக்கியேகரும்புக்கான விளை நிலங்கள் அமைய வுள்ளன.

இவ்வாறு கரும்பிற்கான நீரேந்துப்பிரதேசம் அமைக்கும்போது 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரமும் பாரம்பரிய நெல் விவசாயமும் முற்றாக அழிக்கப்படும். இது தெரிந்தும் எம்மவர்கள் இந்தத் திட்டத்துக்குத்துணைபோவது வெட்கக்கேடான செயலாகும். இதற்காக நாவலர் பண்ணை முழுமையாகச் சூறையாடப்படுகின்றது. அதனை நம்பித் தொழில் தொடங்கியவர்கள் வீதியில் அலைய அவர்களின் வாக்கைப்பெற்றுநாடாளுமன்றம்சென்றவர்கள்அவர்களின் நெஞ்சில்மிதித்துமுன்னேறத் துடிக்கிறார்கள். இந்தப் பாதகச் செயலை அவர்கள் நிறுத்தவேண்டும்.

சீனித் தொழிற்சாலையினையும் அதனோடு இணைந்த கரும்பு உற்பத்தியினையும் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நேரில் தலையிட்டுப் பெற்றுள்ளார். இந்த அனுமதியின் போது ஜனாதிபதி அமைச்சரவையிலே வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர் எனக் கூறியுமுள்ளார். அவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஆதரவைத்தெரிவித்திருந்தால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார், யார் என பெயர்களை ஜனாதிபதி கூறியே ஆகவேண்டும். அதனை வாக்களித்த மக்கள் அறியவேண்டும்.

இந்தக் கரும்புச் செய்கைக்கு எதிராகவும் சீனித் தொழிற்சாலைக்குஎதிராகவும் விரைவில் வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் தொடர் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு தடுத்து நிறுத்த போராடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அதற்காக எம்மோடு ஒத்த கருத்தைக் கொண்டுள்ள அனைவருடனும் பேசி விரைவில் ஓர் முடிவினை எட்டுவோம்- என்றார்.

## மருந்துத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பட்டுக் காணப்படுவதாகவும் உலகளாவிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் இலங்கையின் வைத்தியத்துறைக்கான அர்ப்பணிப்புக்களுக்குபாராட்டு கிடைத்துள்ளது.

தற்போதுநாட்டில்காணப் படும் மருத்துவத்துறை தொடர்பிலான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் அந்த தீர்வுகள் இலவச மருத்துவத்துறையின் எதிர் காலத்தில் எவவகையில் தாக்கம் செலுத்தும் என்பது பற்றியும் அரசாங்கம் விசேட அவதானம்செலுத்தியுள்ளது.

கொவிட் பெருந்தொற்றுப் பரவல் காரணமாக முழு உலகத்தினதும் சுகாதாரச் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. கொவிட் தடுப்பூசிகளுக்காக இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 60 மில்லியன்களை செலுத் தப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் கொவிட் தொற்று அதிகளவில் பரவ ஆரம்பித்ததன் விளைவாக மருந்து தயாரிப்பு நிறுவனம் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் அதனால் 'சீரம்' நிறுவனம் இந்தியாவிலிருந்தேசெல்லவேண்டிய நிலைமை உருவாகியிருந்து. அதனால், செலுத்திய பணத்திற்கு ஊசிகளும் கிடைக்கவில்லை. பணத்தையும்மீளப்பெறமுடியாமல் போய்விட்டது. அன்று முதல் சுகாதாரத்துறை பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

பொதுவாக மருத்துவ விநியோகத்துறைக்கு ஒரு வருடத்திற்கு அவசிய மான பொருட்கள் முன்கூட்டியே கோரப்படும். ஒருவருடத்திற்கு அவசியமான பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் இயலுமை காணப் பட்டது. அக்காலத்தில் நிதி நெருக்கடியும் காணப்படவில்லை.

கொவிட் பரவல் காரணமாக விமான மற்றும் கப்பல் போக்குவரத்துச் செயற்பாடுகள் தடைப்பட்டமையினால் நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் பொருட்கள் பரிமாற்றச் செயற்பாடுகளும் முடங்கின. அந்த நேரத்தில் கொவிட் கட்டுப்பாட்டிற்குமுன்னுரிமை அளிக்கப்பட்டமையினால் மருந்து பொருட்களை களஞ்சியப்படுத்தும்செயற்பாடுகள் மீது அவதானம் செலுத்த முடியாமல் போயிருந்தது.

கொவிட் பரவலில் இருந்து மீண்டு நாடு ஓரளவு சுமூகமான நிலைமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில் பெரும் ஆரப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அதனால் முழு நாடு சில்லான நிலைமையை எதிர்கொண்டிருந்தது. அதனால் பெறுகைச் செயற்பாடுகளிலும் தாமதம் ஏற்பட்டன. மருந்து பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் 9 மாதங்களை செலவிட வேண்டிய நிலைமை உருவாகியிருந்தது.

இது தொடர்பில் அமைச்சரவையில் விளக்கமளித்த பின்னர் நிலைமையை சரியானமுறையில்விளங்கிக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,நிதிஅமைச்சுடன் கலந்தாலோசித்து மருந்து கொள்வனவுக்குஅவசியமான வேலைத்திட்டம் ஒன்றை பரிந்துரைத்தார். அதனால் சில பிரச்சினைகள் காணப் பட்டாலும் மருந்து தட்டுப்பாடு தொடர்பிலான நிலையை சீரமைக்க முடிந்துள்ளது. எவ்வாறாயினும் நிலைமைகளை சீரமைப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையொன்று சுகாதார அமைச்சினால் அமைச்சரவைக்குச் சமர்பிக்கப் படவுள்ளது

தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகளைஅரசாங்கம் ஆரம்பித்துள்ளது. 19 புதிய மருந்துவகைகளைஉற்பத்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. அடுத்த காலண்டில் இன்னும் 17 மருந்துகளின் உற்பத்தி செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படும். அதன்பின்னரான இருவருடங்களில் 30 - 35சதவீதம் வரையிலான மருந்துப் பொருட்களை உள் நாட்டில் உற்பத்திச் செய்ய அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

கேள்வி - 2021 ஆம் ஆண்டில் பல மில்லியன்கள் செலவில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ விநியோகத்துறையின் தகவல் கட்டமைப்பு முடங்கிப் போயுள்ளது. தற்போது 100 மில்லியன்கள் செலவில் அதனை மீள ஆரம்பிப்பதற்கான அவசியம் யாது ?

பதில் - மேற்படி தகவல் கட்டமைப்பானதுடிலீட்பட்டன் (Delete Button)அமத்தப்பட்டதால் முழுமையாக அழிந்துப் போய்விட்டது என்ற காரணத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதனால் அது பற்றிய விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் திற்கு அது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாடாளு மன்றத்தின் கோப் குழுவும் அதுபற்றிஅறிவுறுத்தியுள்ளது. அதுதொடர்பில்அவசியமான எந்தவொருதீர்மானத்தையும் மேற்கொள்வதற்கு பின்வாங் கப்போவதில்லை.

கேள்வி - மயக்க மருந்து தொடர்பிலான பிரச்சினைகளை பேராதனை மற்றும் றாகமை வைத்தியசாலைகளில் காண முடிந்தது. அது தொடர்பிலான குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆராயப்படுவதாககூறப்பட்டது. அதன் தற்போதைய நிலைமை யாது?

பதில் - இது தொடர்பில் பல்வேறுபட்டநிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இவை தொடர்பாக பேராதனை சிறுவர் வைத்தியசாலை மற்றும் ராகம போதனா வைத்தியசாலை பிரதான வைத்தியர்களினால் தெளிப் படுத்தல்கள் வழங்கப்பட்டன.

பேராதனைவைத்தியசாலையில் மேற்படி ஊசியை பயன்படுத்தவில்லை என்பதை வைத்தியர்கள் உறுதிப் படுத்தியிருந்தனர். அது தொடர்பிலான முதற்கட்ட அறிக்கையும்கிடைத்துள்ளது. றாகமை வைத்தியசாலை தொடர்பிலான அறிக்கையும் எதிர்வரும் நாட்களில் கிடைக்கும். பிரச்சினைக்குரிய மயக்க மருந்துகள் பாவனையிலிருந்துநீக்கப்பட்டுள்ளன.

கேள்வி - நாட்டிற்கு கொண்டுவரப்படும் மருந்துகளை பரிசோதிப்பதற்கான பணிக்குழுவும் ஆய்வுக்கூட வசதிகளும் போதியளவில் இல்லை என பிரதம நிறைவேற்று அதிகாரி கூறியுள்ளார். அவ்வாறாயின் இந்தியாவிலிருந்துகொண்டுவரப்படும் மருந்துகள் பரிசோதனை செய்யப்படாமல் மக்களுக்கு வழங்கப்படுகின்றனவா? இல்லாவிட்டால் அதிகாரிகள் பற்றாக்குறையா? ஆய்வுக் கூட வசதிகள் போதாமைக்கான காரணம் என்னவென கண்காணிக் கப்படவில்லையா?

பதில் - ஆய்வுக்கூட வசதிகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் தற்போதும் உலகசுகாதாரஸ்தானபத்துடன் கலந்தாலோசித்து நிபுணர்களின் ஆலோசனைகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மறுமுனையில் அரச மற்றும் தனியார்துறை இணைந்த வேலைத்திட்டம் பற்றிஆலோசிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இவ்வருட இறுதிக்குள் ஆய்வுக் கூட வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியமான அறிவுரைகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார்

## பிரபாகரன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விவரங்கள் எவையும் தெரியாது என்றார்.

“பிரபாகரனின் மரபணு பரிசோதனை தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் இறுதிப் போர் நடைபெற்றபோது இரண்டு வாரங்களுக்கு மட்டுமே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன்.

பிரபாகரன் கொல்லப்பட்டாரா என்பதுகூட எனக்கு தெரியாது. அதைப் பற்றி எனக்கு எதுவும் சொல்லப்படவில்லை. அது மேல்மட்டத்தை சேர்ந்தவர்களுக்கே தெரியும். அவர்களே அந்த விடயங்களைக் கட்டுப்படுத்தினர்” - என்றார்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டிவாஸ் குணவர்தன, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர்சமிலலியனகே, சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொருளாளரும்நாடாளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மேற்கு அமைப்பாளர் தஹாம் சிறிசேன ஆகியோரும் இந்தச் சந்திப்பில் உடனிருந்தனர்.

## நாடாளுமன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக அளிக்கப்படும்.

அந்தப்பணத்தில் அவர் உண்டு,குடித்துமகிழ்ந்துவிட்டு மரித்துவிடுவார்கள். எதிர்கால சந்ததியினருக்கு வெறும் குப்பை மட்டுமே எஞ்சும் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை கண்டறிய சுயாதீன ஆணைக்குழு தேவை

## பேராயர் கர்தினால் கூறுகிறார்

இலங்கையின் பெருந்தோட்டத் துறைகளில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான சுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

200 வருடங்களாக மலையகப் பெருந்தோட்ட மக்கள் அனுபவித்து வருகின்ற காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதுடன், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

ஐ.எம்.எப். இடமிருந்து பெற்றுக் கொண்ட கடன் மூலம், தொழில் முனைவோர்கள் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக பணத்தைப் பயன்படுத்தியே நாட்டின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியுமே தவிர, தடை விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிப் பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் நாட்டின் தேசியபொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறு செய்வதால், எமது நாட்டை மேன்மேலும் அதள பாதாளத்திற்கே தள்ளிவிடும் என பேராயர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை கரிட்டாஸ் செடெக் நிலையத்தின் தவிசாளரும் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தலைமையில் 'பெருந்தோட்ட சமூகத்தின் கௌரவமிக்க குடியுரிமையை நோக்கி' எனும் தொனிப்பொருளில் கொழும்பிலுள்ள இலங்கை கரிட்டாஸ், செடெக் நிலையத்தில் ஊடகச் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கூறுகையிலேயே மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

'திறந்த பொருளாதார முறைமையின் மூலம், கமின் பெற்றுக்கொண்டு சூறையாடுவதையே நம் நாட்டு அரசியல் தலைவர்கள் செய்து வருகின்றனர். இந்நாட்டு வளங்களை மேம்படுத்தாது, தன்னிறைவுமிக்க நாடாக மாற்ற முடியாது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர்கள் இந்நாட்டைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். இவ்வாறு அவர்கள் கைப்பற்றிய நாடுகளின் வளங்களை சுரண்டினர். நாட்டின் பல்வேறு விதமான பயிர்களைப் பயிரிட்டு அதன் மூல



மாகக் கிடைக்கப்பெறும் இலாபத்தை தத்தமது தாய் நாட்டுக்கு கொண்டு செல்வதே தமது பிரதான நோக்கமாக இருந்தது.

அதுபோலவே, தற்போதும்கூட நம்நாடுபோன்றவறியநாடுகளிடமிருந்து வளங்களைச் சூறையாடுவதையே செய்து வருகின்றனர். இதற்குப் பெயர் திறந்த பொருளாதாரம்.

இந்ததிறந்தபொருளாதாரமுறைமை மூலமாக சிறிய குழுக்களுக்கு எந்தவித எதிர்காலமும் கிடையாது. நாட்டில் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரம் அல்லர், சகல தொழிலாளர்களும் புதிய வடிவில் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். இந்த முறைமையின் கீழ் எமது தோட்டத் தொழிலாளர்கள் முதலாவதாக சிக்கிக்கொண்டுள்ள பிரிவினராக அறிந்துகொள்ள முடிகிறது.

அதாவது, சர்வதேச நாணய நிதியம் என்பது மேலைத்தேய நாடுகளின் பொருளாதாரப் பலத்தை வைத்துக்கொண்டு, இந்த முறையை முன்னெடுக்கின்ற அமைப்பாகும். இதற்கு நிதி அளிப்பது பணம் படைத்த நாடுகள்தான். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளே சர்வசே நாணய நிதியத்துக்கு நிதி வழங்குகின்றன.

இதன்மூலம்பணத்தைஎங்களுக்கு கடன் வழங்குவது நடப்பதல்ல. மாறாக எமது பணத்தை அவர்கள் சுரண்டுகிறார்கள்.

ஆகவே, திறந்த பொருளாதார முறைமையின் மூலமாக ஒருபோதும் நாம் சிறந்த பொருளாதரமிக்க நாடாக உருவாக முடியாது. இந்த கடன் திட்டத்தின் காரணமாக, எமது பிரச்சினைகளை எமக்கு தீர்த்துக்கொள்ள முடியாது. மேலும் தன்னிறைவுமிக்க நாடாகவும் உருவாக முடியாது.

200 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகள் போல கொண்டு வரப்பட்டு, முறையான சம்பளம் கொடுக்காது, அவர்களுக்கு முறையானதொரு வீடு கொடுக்காமல் அடிமை வாழ்க்கை வாழ வேண்டும் என்ற போக்கை வெள்ளையர்கள் அமைத்திருந்தனர். இதனையே பெருந்தோட்டக் கம்பனிகளும் தொடர்ந்து செய்து வருகிறது. இதனால் இந்த மக்கள் பெரும் அழுத்தத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் வீதிகளை சற்று புனரமைத்துக் கொடுப்பதும், பகுதியளவில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் மாத்திரம் அவர்களுக்கான தேவைகள் கிடைத்து விட்டது எனக் கருத முடியாது. முதலில் அவர்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும். சிறைக்கைதிகளும் மனிதர்களே என வாசகம் எழுதப்பட்டுள்ளது. இந்த தொழிலாளர்களும் மனிதர்கள்தான். அவர்களுக்கான உரிமை பெற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் இந்நாட்டு பொருளாதாரத்துக்கு ஜீவநாடியாக இருப்பதை அவர்களுக்கு உணரும் விதத்தில் அவர்களை நடத்த வேண்டும். அதற்கான கௌரவத்தை அவர்களுக்கு கொடுப்பதற்கு ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டியது அவசியம்.

தேயிலை பயிர்ச் செய்கையின் மூலம் கஷ்டப்படுகின்ற தொழிலாளர் வர்க்கத்துக்கு கிடைக்கப்பெறுகின்ற வேதனம் மிகவும் சொற்பமாகவுள்ளது. கம்பனிக்காரர்களும் இடைத்தரகர்களும் கோடிக்கணக்கில் பணத்தை பெற்றுக்கொள்கின்றனர். இந்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றால், இந்நாட்டு ஆட்சியாளர்கள் இந்த நிலைமை தொடர்பில் முறையாக அறிந்துகொள்ள வேண்டும். 200 ஆண்டுகளாகின்ற இந்த மலையக மக்களுக்கு ஆத்ம கௌரவத்தை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சர்வதேசநாணயநிதியத்திடமிருந்து கடன்பெற்றுள்ளமையால், நாட்டின் தேசிய பொருளாதாரம் பலம் பெற்றுவிட்டதாக நினைப்பது வேடிக்கையாகவுள்ளது.

எமது நாட்டை மேன்மேலும் எளிய நாடாக பாதாளத்துக்கு கொண்டு செல்லவே சர்வதேச நாணய நிதியமும், நாட்டு அரசியல் தலைவர்களும் செய்கின்றனர். இதைப்போன்றே தொழிற்சங்கவாதிகளும் அவர்களை நடத்துகின்றனர். - என்றார்.

இந்த ஊடக சந்திப்புக்கு ஆயர் பேரவையின் தலைவரும் குருணாகல் மறைமாவட்ட ஆயர் ஹெரல்ட் அன்தனி, பெருந்தோட்ட துறை மக்கள் வாழ்கின்ற பகுதிகளைச் சேர்ந்த கண்டி, பதுளை, காலி, இரத்தினபுரி மறை மாவட்ட ஆயர்களும் கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (05)

# இளம் குற்றவாளிகளுக்கு தொழில், ஆன்மிக பயிற்சி

## அவசியம் என மேற்பார்வைக் குழு சுட்டிக்காட்டு



குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு தண்டனை பெற்றுவரும் இளம் குற்றவாளிகளுக்கு தற்போது காணப்படும் பொதுவான கல்வி முறையின் கீழ்கற்பிப்பது தோல்வி அடைந்திருப்பதாகவும், அவர்களுக்காக ஆன்மிக வளர்ச்சி மற்றும் நடத்தையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என துறைசார் மேற்பார்வைக் குழு சார்பில் கலந்துகொண்ட இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

மேலும், இளம் குற்றவாளிகளுக்கு தொழிற்கல்வி வழங்குவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அதேபோல் ஒரு வருட பயிற்சிக்காலம் முடிந்து மீதம் உள்ள 2 ஆண்டுகளில் வருமானம் ஈட்டும் முறை போன்றவற்றை அறிமுகப்படுத்துவதோடு, சிறுவர்கள் 3 வருட வதிவிடக்காலப்பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும்போது பொருளாதார வசதிகளுடன் வெளியே செல்லவைப்பதன் மூலம் குற்றச்செயல்கள் குறையும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் உள்ள வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரி மற்றும் சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களம் ஆகியவை நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அழைக்கப்பட்டிருந்தபோதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தலைமையில் அண்மை யில் கூடியது.

இதன்போது, 16 - 22 வயதுக்குட்பட்ட காலத்தில் குற்றம் செய்ததற்காக குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட இளம் குற்றவாளிகள் இந்த நிறுவனத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக் காலம் என்பது சிறைத்தண்டனை அல்ல, 3 ஆண்டுகள் கட்டாயத் தடுத்துவைப்புக் காலம் என்றும், இந்த தடுத்துவைப்பு காலத்துக்குப் பின்னர் சிறுவர்கள் வெளிச் சூழலில் அரசாங்க வேலைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஏ.வி.வஜிரா தமயந்தி தெரிவித்தார்.

நிறுவனத்தின் தரவுகளின்படி, 2013 - 2022 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் இளம் குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படும் போக்கு குறைவடைந்திருந்ததாகவும், இந்தப் பயிற்சிக் கல்லூரியில் நுழையும் பல சிறுவர்களின் குடும்ப உறவுகள் இல்லாமல் போவதும் தெரியவந்துள்ளது.

வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரியில் கல்வி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய பாடசாலைக் கல்வி வழங்கப்படுவதாகவும், இது அவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கமைய, அங்குள்ள சிறுவர்கள் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றபோது தேர்ச்சி வீதம் குறைவாகவே காணப்படுகிறது.

2014 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய சிறுவர்களின் எண்ணிக்கை 16 ஆக இருந்த போதிலும், அவர்களில் ஒருவரே சித்தியடைந்துள்ளார்.

2021 ஆம் ஆண்டில் ஒரு சிறுவன் மாத்திரமே தேர்ச்சியடைந்துள்ளார்.

பாடசாலைக்கல்வியைக்கட்டாயமாக்கும் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு தொழில்முறை கல்வியைத் திறம்பட வழங்குவதில் சிக்கல் இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இந்தக் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க குழு இணங்கியது.

அதனையடுத்து, இளம் குற்றவாளிகளில் எத்தனை பேர் மீண்டும் குற்றவாளிகளாக இருக்க வாய்ப்புள்ளது என்ற கேள்வியை குழு எழுப்பியது. அதற்குப் பதிலளித்த அதிகாரிகள் 11 பேரில் 9 பேர் மீண்டும் குற்றவாளிகளாக இருக்க வாய்ப்புள்ளது. - என்றனர்.

இந்தச் சிறுவர்களுக்கான மொழிப் புலமையை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக இச்சிறுவர்களுக்கு வெளிநாட்டு வேலைகளுக்குப் பரிந்துரைப்பதற்கான சில வழிமுறைகளைத் தயாரிப்பது தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு, சிறைச்சாலைகளில் நிலவும் அதிக நெருக்கடியைக் குறைக்க சமூகம் சார் சீர்திருத்த திணைக்களத்தைப் பயன்படுத்த முடியும் எனவும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் குழு சுட்டிக்காட்டியது.

மேலும், இந்தக் கூட்டத்தில் சமூக அடிப்படையிலான திருத்தங்களுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டியவர்களில், ஆனால் நீதிவான்களால் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் சுமார் 50 வீதம் பேர் திருத்தங்களுக்கு பரிந்துரைக்கப்படலாம் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. இது மிகவும் சிக்கலான நிலை என சுட்டிக்காட்டிய குழு, இது தொடர்பில் நீதிபதிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தது.

அரச நிறுவனங்களைப் பரிசீலிக்கும் போது, ஒரே நோக்கத்துக்காக பல நிறுவனங்கள் இருப்பதும், அந்த நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்புகள் இன்மையும் பிரச்சினையாக உள்ளதாக இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

திட்டங்களை முன்வைக்கும்போது, பசுமைத்திட்டங்கள், பிளாஸ்டிக் மற்றும் குடிநீர் போத்தல்களை மீள்சுழற்சி செய்யும் திட்டங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் வருமானம் பெற்றுத்தரும் செயல்முறைகளை உருவாக்க முடியும் என்றும் அவர்கள் முன்மொழிந்தனர்.

மேலும், அரசாங்கத்தின் உதவியுடன் ஓரளவு வருமானம் ஈட்டுபவர்கள் அந்தப் பணத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு திருப்பிச் செலுத்தும் திறனைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய பணத்தை மற்றவர்களுக்கு முதலீடு செய்வதன் மூலம் இதுபோன்ற திட்டங்களைச் செய்ய அரசாங்க நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

அரச நிறுவனங்கள் பொது நிதியில் தங்கியிருப்பதைத் தவிர்த்து, தமது கட்டுப்பாட்டுக்குத் தேவையான பணத்தை வழங்க வேண்டும் என இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். பல்கலைக்கழகங்கள் மூலம் செய்யப்படும் ஆராய்ச்சிகளைக் கொள்கை வகுப்பாளர்களுடன் இணைப்பது முக்கியம் என்றும் அவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரஜிகா விக்ரமசிங்க மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (05)

# நாட்டின் வங்குரோத்து நிலைமைகளுக்கு 225 எம்.பிக்களும் பொறுப்பு கூறவேண்டும்

## நீதியமைச்சர் விஜயதாஸ சாடுகிறார்

நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளமைக்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். கடன்பெற்றஅரசாங்கங்களின் அமைச்சரவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் இன்று ஆளும், எதிர்க்கட்சி பக்கம் உள்ளார்கள். கடன் மறுசீரமைப்பு திட்டத்தைத் தவிர்த்து சிறந்த மாற்றுத்திட்டத்தை முன்வைத்தால் ஜனாதிபதியிடம் கலந்துரையாடி அதனை விரைவாக செயற்படுத்தத் தயார் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது, வங்குரோத்து நிலை அடைந்தது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். பொருளாதாரப் பாதிப்பு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திய போது வெஸ்மினிஸ்டர் முறைமைக்கு அமைய அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அரசாங்கத்தை பொறுப்பேற்காத காரணத்தால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை நாங்கள் ஒன்றிணைந்து தோற்றுவித்தோம்.

2022 ஆம் ஆண்டு நாடு முழுவதும் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை யுகம் நீடித்திருந்தது. நாளாந்தம் பல மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறான



பின்னணியில் 97 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கத்தை 2023 ஆம் ஆண்டு இறுதி பகுதியில் ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். தற்போது பணவீக்கம் கட்டம் கட்டமாகக் குறைவடைந்து செல்கிறது.

பொருளாதாரப் பாதிப்பு ஓரிரு நாள்களில் இடம்பெற்றதொன்றல்ல. 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு தரப்பினரது ஆலோசனைக்கு அமைய வரிச் சலுகை வழங்கினார். உரம் தொடர்பில் தவறான தீர்மானத்தை எடுத்தார். இதனால் பொருளாதாரம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

75 ஆண்டு கால ஆட்சியாளர்கள் திருடர்கள், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருடர்கள் என அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறது. டி.எஸ்.சேனாநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் மீது ஏதும் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் குறிப்பிடுங்கள் என வினவினால் எவருக்கும் பதிலளிக்க முடியாது.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய மூடிய பொருளாதார கொள்கையால் நாடு தன்னிறைவடைந்தது. திறைசேரியின் கையிருப்பு பலப்படுத்தப்பட்டது. மூடிய பொருளாதார திட்டத்தை விமர்சித்து ஜே.ஆர் ஜயவர்தன ஆட்சிக்கு வந்தார் இறுதியில் நாடு பாரிய விளைவுகளை எதிர்கொண்டது. மூடிய பொருளாதார கொள்கையில் இருந்து விலகி இலங்கை திறந்த பொருளாதார கொள்கைக்கு சென்றதால் ஏற்பட்ட விளைவை கருத்திற்கொண்டு இந்தியா மூடிய பொருளாதார கொள்கையை தொடர்ந்து அமுல்படுத்தி தாமதப்படுத்தப்பட்ட நிலையில் திறந்த பொருளாதார கொள்கையின் அம்சங்களை செயற்படுத்தியது.

காலத்துக்கு பொருளாதாரக் கொள்கையை அரசியல் தேவைகளுக்காக மாற்றியமைத்ததால் நாடு என்ற ரீதியில் வீழ்ச்சியடைந்தோம். இதனால் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டியிருந்தது. தற்போது வங்குரோத்து நிலையடைந்துள்ள பின்னணியில் 17 ஆவது தடவையாக ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளோம்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளமைக்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். ரணில், ராஜபக்ஷ, மைத்திரி என தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களின் அமைச்சரவையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் இன்று எதிர்க்கட்சி பக்கமும், ஆளும் தரப்பு பக்கமும் உள்ளார்கள். ஆகவே எவரும் பொறுப்பில் இருந்து விலக முடியாது.

கடன் மறுசீரமைப்பை தவிர சிறந்த மாற்றுத்திட்டம் ஏதும் இருந்தால் எதிர்க்கட்சிகள் தாராளமாக முன்வைக்கலாம். அவ்வாறான யோசனைகளை நிதியமைச்சரான ஜனாதிபதியிடம் முன்வைத்து மறுகணமே கடன் மறுசீரமைப்பு யோசனையை மாற்றியமைக்கிறேன். - என்றார். (05)

# காலநிலை தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தை இலங்கையில் அமைக்க ஜேர்மன் நடவடிக்கை

ஜேர்மன் - லங்கா காலநிலை தொழில்நுட்ப நிறுவனம் விரைவில் இலங்கையில் காலநிலைதொழில்நுட்பபயிற்சிநிறுவனத்தை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

ஜேர்மனின் சன் பாமின் குரூப் ஏ.ஜி. நிறுவனத்தின் தலைவர் பீடர் ஸ்க்ராம்ஸின் தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்று பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளது.

ஜேர்மன்-லங்காகாலநிலைதொழில்நுட்ப நிறுவனம் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி, நவீன தொழில்நுட்ப விவசாயத்துறை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அதன் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன. இலங்கை இளைஞர்களுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பத்தில் பயிற்சியளிக்கும் திட்டங்களுக்கு சுற்றாடல் நன்மைகள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவை கருத்தில் கொண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கு இலங்கை முன்னுரிமை வழங்கும் என பிரதமர் இதன்போது உறுதியளித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனிதர்களாகப் பாருங்கள்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் அரசுத் தலைவருமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாள் பயணமாக வந்திருந்தார். அவருடைய கட்சியைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் அவரது பயணம் இடம்பெற்றிருந்தது. இந்த மூன்று நாள்களிலும் பல தரப்பட்ட மக்களையும் யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறார் மைத்திரிபால.

தெற்கைச் சேர்ந்த சிங்கள அரசியல் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் அதிலும் தமிழ் மக்களுடன் இத்தனை நாள்கள் தங்கியிருந்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்துகொண்டது அண்மைக் காலத்தில் இதுவே முதலாவது சந்தர்ப்பமாகும். பதவியில் இருக்கும்போது தலைவர்கள் நிகழ்வுகளுக்காக அவசர அவசரமாக வருதும் நிகழ்வு முடிந்ததும் திரும்பிச் செல்வதும் அவ்வப்போது நடப்பதுதான் என்றாலும், தெற்கின் சிங்களத் தலைவர்கள் வடக்கில் மக்களைச் சந்தித்து உறவாடுவது என்பது அரிய நிகழ்வுகளில் ஒன்று.

அந்த வகையில் மைத்திரியின் பயணம் முக்கியமான ஒன்று. அடுத்த ஆண்டு தேர்தல்கள் வரப்போகின்ற நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் நோக்கங்களைக் கொண்டு மைத்திரியின் யாழ்ப்பாணம் பயணம் அமைந்திருந்தாலும்கூட, அவர் யாழ்ப்பாண மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை அமைதியாக – ஆறுதலாக – ஆற அமர்ந்து கேட்க முனைந்தது பாராட்டுக்குரியது. இதுபோன்ற நீண்ட நெடிய அரசியல் கலந்துரையாடல்கள் தெற்குக்கும் வடக்குக்கும் இடையே நடந்திருந்தால் ஒருவேளை பிரச்சினை என்றோ தீர்ந்திருக்க வாய்ப்புக் கிடைத்திருக்கக்கூடும்.

இருப்பினும் முன்னாள் அரசுத் தலைவரின் இந்தச் சந்திப்புக்கள் குறித்த மகிழ்ச்சியை எல்லாம் அவர் கடைசி நாளில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் போட்டுடைத்துவிட்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் குறித்த கேள்விக்கு, அவர் இறந்துவிட்டாரா என்பதுகூடத் தனக்குத் தெரியாது, அது பற்றித் தன்னிடம் யாரும் எதுவும் கூறவில்லை, அந்த மாதிரியான விடயங்களை எல்லாம் மேல்மட்டத்தவர்களே பார்த்துக்கொண்டார்கள், நான் போர்க் காலத்தில் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன், அந்தக் காலத்தில்கூட வெளிநாட்டில் இருந்து மகிந்தவே பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் படையினருக்கு உத்தரவுகள், நெறிப்படுத்தல்களை வழங்கி வந்தார் என்று நழுவல் பதில் அளித்துள்ளார்.

கடந்த காலங்களில் தெற்கில் சிங்கள மக்கள் மத்திய ஆற்றிய உரைகளில் பல தடவைகள் போர் வெற்றியில் தனக்கும் பங்கிருக்கின்றது என்று, தான் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்ததை முன்வைத்து மைத்திரிபால சிறிசேன உரிமைகோரி இருக்கின்றார். இந்த நாட்டில் இருந்து புலிகளை அழிப்பதற்குத் தானும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருக்கின்றார் என்று தெரிவித்திருக்கின்றார். அதாவது ராஜபக்சக்கள் மட்டுமல்ல புலிகளை ஒழிப்பதில் தனக்கும் முக்கியமான பங்கிருந்தது என்று சிங்கள வாக்குகளுக்காக தெற்கில் கருத்துத் தெரிவித்த அவர், வடக்கில் – அதுவும் யாழ்ப்பாணம் வந்ததும் – குத்துக்கரணம் அடித்து பதில் பாதுகாப்பு அமைச்சராகத் தான் பதவி வகித்த காலத்தில் தான் ஒரு 'டம்மி' என்பதுபோலத் தெரிவித்திருப்பது, வடக்குக்கும் தெற்குக்கும் மாறி மாறி கருத்தைச் சொல்லும், வாக்குகளுக்காக மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் விலாங்குத் தனத்தில் இருந்து அவர் இன்னும் வெளியேறவில்லை என்பதையே உணர்த்தி நிற்கின்றது.

மக்களை மனிதர்களாக அன்றி வாக்குகளாக மட்டுமே பார்க்கும் இத்தகைய அரசியல் காரணமாகவே இந்த நாட்டில் தமிழர்களின் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் நீடிக்கின்றது. மக்களை மனிதர்களாகப் பார்த்திருந்தால் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு பிரச்சினையை எப்போதோ தீர்த்திருப்பார்கள். இந்த அரசியல்வாதிகள் என்று மாறப்போகின்றார்கள்?

# கூட்டாட்சிக் கொள்கையின் பிரகாரம் நீண்டகால அரசியல் தீர்வு வேண்டும்

## இந்தியாவிடம் பிரித்தானிய தமிழர் பேரவை கோரிக்கை

உள்ளூராட்சி பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடைக்கால ஆணையம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று பிரித்தானியா தமிழர் பேரவை இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதோடு, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற் றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் காணப்படும் கூட்டாட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு நீண்ட கால அரசியல் தீர்வு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

பிரித்தானியாவுக்கு விஜயம் செய்துள்ள பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் அண்ணாமலையிடத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவணத்தில், இலங்கை அரசாங்கம் சர்வதேச நியமங்களை அலட்சியப்படுத்துவதையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு இணங்காத தன்மையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருவதால் இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சிய அரசாங்கங்கள் அமெரிக்காவுடன் இணைந்து நீதி, சமத்துவம், சமாதானம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகள், பேச்சு மூலம் நீண்ட கால அரசியல் தீர்வு உட்பட பல சட்ட ரீதியான தீர்வுகளை மேற்கொள்ள முன்முயற்சிகளை எடுக்க வேண்டிய நேரம் இதுவாகும்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் இலங்கை தொடர்பில் எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியின் மையமாக இருக்க வேண்டும்.

14 ஆண்டுகளுக்குப் பிறகும் தாய்மார்கள், மனைவிகள் மற்றும் குழந்தைகள் தங்கள் காணாமல்போன உறவினரின் கதி என்னவென்று தெரியாமல் தங்கள் மகன், மகள், கணவன், தந்தை அல்லது தாயை தேடுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய நீதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாங்கள் நம்புகிறோம்.

மேலும், நீதி வழங்குவதற்கும், மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் ஒரு சர்வதேச சுயாதீன குற்றவியல் நீதி பொறிமுறையை அமைக்க வேண்டும்.

இடைக்கால நடவடிக்கையாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் 1948 ஆம் ஆண்டு முதல் சிறிலங்கா அரசாங்கத்தால் ஒருபோதும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. தற்போது உள்நாட்டுப் போரால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், உள்கட்டமைப்பை புனரமைக்கவும் போதுமான சட்ட, நீதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடைக்கால ஆணையம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்த விடயத்தில், 1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இலங்கையில் இனப்பிரச்சினைக்கான பரிகாரமாக இந்திய ஒன்றியத்தில் காணப்படுவதை போன்றதொரு பிராந்திய சுயாட்சி அல்லது அரை கூட்டாட்சி மாதிரியை முன்வைத்தது. அந்த மாதிரியின் உள்நோக்கமும் நோக்கமும் இலங்கையின் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த மாகாண சபை சட்டமூலங்களில் மிகவும் நீர்த்துப் போனது.

சட்டமூலத்தில் உள்ள அற்ப அதிகாரங்கள் கூட மாகாண சபைகளுக்கு முழுமையாக பகிர்ந்தளிக்கப்படவில்லை. நிறைவேற்று அதிகாரங்கள் தெரிவு செய்யப்பட்ட சபைக்கு வழங்கப்படாமல் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநருக்கு வழங்கப்படுகின்றன. கவுன்சிலுக்கு நிதி அதிகாரங்கள் எவையும் இல்லை மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை பெறுவதற்கான வாய்ப்பும் இல்லை. தற்போதைய காலகட்டத்தில் மேற்படி மாதிரி தேவைக்கு பொருந்தாது என்பதால் இது சரியான முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

நீண்ட கால அரசியல் தீர்வாக இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் காணப்படும் கூட்டாட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு நீண்ட கால அரசியல் தீர்வு, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்க அரசாங்கங்களின் நடுவர் மன்றத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், பொருளாதார ஒருங்கிணைப்புக்காகத் தமிழ்நாட்டின் பொருளாதார ஒருங்கிணைப்பு, வடக்கு, கிழக்கு தமிழர்கள் மற்றும் மலையகத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பு துரித கதியில் நடைபெற வேண்டும். யாழ்ப்பாண விமான நிலையத்தை உண்மையான சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் தற்போதைய இணைப்புத் திட்டங்கள் மேம்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, மத்திய கிழக்கு, தூர கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் விமான சேவைகளுடன் இணைக்கப்பட வேண்டும்.

மேலும், சென்னை, காரைக்கால் மற்றும் காங்கேசன்துறை இடையே கப்பல் சேவையை மேம்படுத்துவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் வகையில் தலைமன்னாருக்கும் தனுஸ்கோடிக்கும் இடையில் தரைவழிப் பாலம் அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# சக் சுரின் யானை தாய்லாந்து பயணத்தை ஆரம்பித்துள்ளது

## விமானம் புறப்பட்டது

சக்சுரின் யானை தாய்லாந்துக்கு அனுப்புவதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட கூண்டுடன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

22 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்குக்கு வழங்கிய யானையை மீளப்பெற்று சிகிச்சைக்கு உட்படுத்த தாய்லாந்து தீர்மானித்துள்ள நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை மூன்று மணியளவில் யானை விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நேற்று காலை விசேட வாகனமொன்று சக்சுரின் யானையை தெகிவளை மிருகக்காட்சி சாலையிலிருந்து கொழும்பு விமான நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் யானைக்கு எந்தவித அசௌகரியமும் ஏற்படாத வகையில் மிகமெதுவாக இந்த நடவடிக்கைகள் இடம் பெறுகின்றனஎனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று அதிகாலை யானையை கூண்டுடன் ரஷ்ய தயாரிப்பு இலுசன் 76 இக்குள் ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி விமானம் புறப்பட்டது. (05)



# மீன்பிடிப் படகு மூலம் கடத்திச் செல்லப்பட்டுள்ள 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் மீட்பு!









வண்ணாத்தவில்லு - கரைத்தீவு பகுதியில் மீன்பிடி படகு ஒன்றின் மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கைப்பற்றப்பட்டதுடன், இது தொடர்பில் விஜய கடற்படை முகாம் வீரர்களால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

1,947 கிலோ பீடி இலைகள் கொண்ட 65 பொதிகளுடன் வண்ணாத்தவில்லு கரைத்தீவு பகுதியில் வசிக்கும் 50 வயதுடைய நபரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதுடன், பீடி இலைகளை கடத்தப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடி படகொன்றையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்த பீடி இலைகள் சட்ட விரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்டபோதே கைப்பற்றப்பட்டுள்ளது. (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கடன் மறுசீரமைப்புக் குறித்து வங்கி வாடிக்கையாளர் எவரும் சந்தேகப்படதேவையில்லை என்கிறார் பிரதமர்

நாட்டிலுள்ள22மில்லியன்மக்களுக்கு 57 மில்லியன் வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன. கடன்மறுசீரமைப்பின் மூலம் அந்த அனைத்து வங்கிக் கணக்கு களுக்குமான நம்பிக்கையை நாம் ஏற்படுத்தியுள்ளோம். அதனால் வங்கி வாடிக்கையாளர்கள் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில் -

தேசியநெருக்கடிநிலையில்அரசாங்கம் முன்னெடுக்கும்செயற்பாடுகள்தொடர்பாக எதிர்க்கட்சி குறுகிய நோக்கங்களுக்காக செயற்படுவதை விடுத்து பொறுப்புடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். விமர்சனங்களுக்கு நாம் எப்போதும் இடமளித்துள்ளோம். என்றாலும் மக் களைத் திசை திருப்பும் எதிர்க்கட்சி மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. 57 மில்லியன் வங்கி வாடிக்கையாளர்களை அவர்கள் அச்சத்திற்குள்ளாக்கினர்.

வங்கிகளை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவருவதற்கானசெயற்பாடுகளையும் முன்னெடுத்தனர்அதுவும்கைகூடவில்லை. ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தை திசை திருப்பும் அவர்களது திட்டமும் பயனளிக்கவில்லை.

அரசாங்கம் என்ற வகையில் நாம் முன்னெடுத்துள்ள இந்த செயற்பாடுகள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் எமக்குஒத்துழைப்புவழங்கும்தேசியவங்கி கட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நாட்டின் பிரதமர் என்ற வகையில் நான் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது நாட்டில் மூன்று பில்லியன் டொலராக வெளிநாட்டு கையிருப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெருமளவு உல்லாசபிரயாணிகள் நாட்டுக்கு வருகை தரும் நிலையில் சுற்றுலாத்துறை மூல மானவருமானம்அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தைகளில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் அளவுக்கு எமது வங்கிக் கட்டமைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எமது வங்கித் துறை சீர்குலைந்தி ருந்ததை பலரும் மறந்து விட்டனர். எனி னும் தற்போது சர்வதேச வங்கிகளுடன் தொடர்புகளை முன்னெடுக்கும் வகையில் அது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

பொருளாதாரவீழ்ச்சியிலிருந்துநாட்டை மீண்டும்கட்டியெழுப்பவேண்டியபொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. அதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச நாணய நிதியம்,உலக வங்கி மற்றும்எமக்குஉதவும்கடன்வழங்குநர்கள் மற்றும் ஏனைய நாடுகளுடனும் பேச்சு நடத்தி நாம் செயல்படுகின்றோம். நிதி யமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அவற்றை வெளிப்படையாக ஏற்கனவே அறிவித்துள்ளார்.

நாடு தள்ளப்பட்டிருந்த மோச மான வீழ்ச்சியிலிருந்து அதனை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அர சாங்கம்மேற்கொண்டுள்ளது. மக்களுக்கான வாழ்க்கைச் செலவு அதிகரித்திருந்தாலும் அதற்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பொருளாதார மேம்பாட்டுக்கான நட வடிக்கைகள் உற்பத்தித் துறைகள் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சீர்குலைந்துள்ள சில நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. அந்த வகையில் கைத்தொழில் துறையில் அரசாங்கத்தின் தலையீடுகள் மேற் கொள்ளப்படும். எமது நிதித் துறையில் முக்கிய நிறுவனமாக மத்திய வங்கி செயற்படுகிறது. கடந்த சில வாரங்களாக அந்த வங்கியை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல் லும் நடவடிக்கைகளை எதிர்க்கட்சி மேற்கொண்டு வருகிறது.

மக்களை திசைதிருப்பும் வகையில் பல்வேறு கூற்றுக்களை அவர்கள் முன் வைத்தனர். வங்கி வாடிக்கையாளர்கள் வங்கிகளிலிருந்து விலகி விடுவார்கள் என அவர்கள் எதிர்பார்த்தனர். எதிர்க்கட்சி அவ்வாறு செயற்படுகின்றமை தொடர்பில் கவலையடைகிறேன்.

நாட்டிலுள்ள22மில்லியன்மக்களுக்கு 57 மில்லியன் வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன. சிறந்த செயற்பாட்டின் மூலம் அந்த அனைத்து வங்கிக் கணக் குகளுக்குமான நம்பிக்கையை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி,அமைச்சரவை மற்றும் மத்திய வங்கியின் மூலம் அதற்கான உறுதிப்பாடுவழங்கப்பட்டுள்ளது. அதனால் வங்கி வாடிக்கையாளர்கள் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. போலியாக முன்னெடுக்கப்பட்ட அத்தனை பிரசாரங்களும் காற்றில் அடித்துச் சென்று விட்டன. அந்தவகையில்அரசவங்கிகளுக்கு மட்டுமன்றி அனைத்து வங்கிகளுக்கும் அரசாங்கம் அந்த நம்பிக்கையை உறுதி செய்துள்ளது. மக்களின் அனைத்து வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்களும் முழுமையாக பாதுகாக்கப்படும் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது. பல்வேறு கூற்றுக்களை முன்வைத்து ஏமாற்று செயற்பாடுகளை எவர் முன்னெடுத்தாலும் அரசாங்கம் வங்கிக் கட்டமைப்புக்கும் வாடிக்கையாளர்களுக்கும் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளது. - என்றார். (05)

## கோட்டாபயவுக்குத் தவறான ஆலோசனை வழங்கியது யார்?

லன்ஷா – கொடஹேவா முறுகல்



வியத்மக அமைப்பு ஊடாக கோட்டாபய ராஜ பக்ஷவை கொண்டு வந்து அவருக்கு தவறான ஆலோசனைகளை வழங்கி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய நாடாளு மன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா இன்று எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆலோசனை வழங்குகிறார் என நாடாளுமன்ற உறுப்பி னர் நிமல் லன்ஷா தெரி வித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நாங்கள் ஆலோசனை வழங்கினோம்.

ஜனாதிபதியான பின்னர் ஆலோசனைவழங்கவில்லை எனநாடளுமன்றஉறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பின் போது மேற்கண்டவாறு குறிப் பிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பி னர்நிமல்லன்ஷாஉரையாற் றியவை வருமாறு -

வியத்கம அமைப்பின் ஊடாக கோட்டாபய ராஜபக் ஷவை கொண்டு வந்து அவருக்கு தவறான ஆலோ சனைகளைவழங்கிநாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியநாலககொடஹேவா இன்று எதிர்க்கட்சித் தலை வருக்கு ஆலோசனை வழங் குகிறார்.

தவறான ஆலோசனைக ளைக் கேட்டால் எதிர்க்கட்சித் தலைவர் பாரிய அரசியல் நெருக்கடிகளைஎதிர்க்கொள்ள நேரிடும்.

நாடாளுமன்ற உறுப்பி னர் நாலக கொடஹேவா கம்பஹா மாவட்ட மக் களைத் தவறாக வழிநடத்தி பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் முதலிடம் பெற்றார்.

நேர்ந்தது என்ன? கம்பஹா மக்கள் ஒட்டு மொத்த மக்களையும் வெறுக்கும் நிலை ஏற்பட்டது.

இதற்கு அவர் பொறுப்புக் கூற வேண்டும். - என்றார்.

இதன்போது குறுக்கிட்டு உரையாற்றிய நாடாளு மன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா வியத்மக அமைப்பு ஊடாக கோட்டாபய ராஜபக்ஷவை நாங்கள் கொண்டு வந்தோம்.

அவர் ஜனாதிபதி பத விக்குத் தெரிவாகுவதற்கு முன்னர் ஆலோசனை வழங்கினோம்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நாங்கள் ஆலோசனை வழங் கவில்லை . என்றார்.

இதன்போது மீண்டும் உரையாற்றிய நிமல் லன்சா கோட்டாபய ராஜ பக் ஷ ஆட்சிக்கு வந்தவுடன் வரி சலுகை வழங்கு மாறு நீங்கள் தான் (நாலக கொடஹேவாவை நோக்கி) ஆலோசனை வழங்கி னீர்கள்.

என்னை குழப்பிக் கொள்ள வேண்டாம். விவாதத்தை நீடித்தால் கப்பல் மூழ்கடித்து கடல் வளத்தை அழித்தமை உள்ளிட்ட பல விடயங்களை வெளிப்படுத்துவேன். - என்றார்.

இதனை தொடர்ந்து மீண்டும் எழுந்து உரை யாற்றிய நாடாளு மன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா, வரி சலுகை வழங்குமாறு குறிப்பிடும் அதிகாரம் எனக்கு இல் லை நான் நிதியமைச்சர், திறைசேரி செயலாளர், மத் திய வங்கி ஆளுநர் என்ற எந்த பதவியையும் வகிக்க வில்லை.

ஆகவே வரி சலுகை யார் வழங்கியது என்பது அறிவு உள்ளவர்களுக்கு தெரியும். - என்றார். (05)

## தோட்டத் தொழிலாளர்களின் ஊ.பி.எப்,, ஊ.டி.எப். 9 சதவீத வட்டிக்கு சட்ட உத்தரவாதம் கிடையாது

விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



பல துயரங்களுக்கு மத்தியில் போராடும் மலையகதோட்டத்தொழிலாளர்களின்ஈ.பி.எப் மற்றும் ஈ.டி.எப் ஆகியவற்றின் மீது பலவந்த மான முறையில் கை வைக்கப்பட்டுள்ளது.

9 சதவீத வட்டி வழங்களுக்கு எவ்வித சட்ட உத்தரவாதமும் கிடையாது. நடுத்தர மக்களின் சேமிப்பைக் கொள்ளையடிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு துணை போக முடியாது என்பதால் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்தோம் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

தேசியகடனை ஒருபோதும் மறுசீரமைக் கப் போவதில்லை என அரசாங்கம் கடந்த காலங்களில் குறிப்பிட்டது. ஆனால் தற்போது சர்வதேச பிணைமுறியாளர் குழுவின் நிபந்தனைகளுக்கு அமைய தேசிய கடன் களை மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மா னித்துள்ளது. ஆகவே அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி பொய் யாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அரசாங்கம், நிதியமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் மக்கள் ஒருபோதும் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு பாரிஸ் கிளப் உடன் இடம்பெற்ற பேச்சின் போது சகல கடன் வழங்குநர்களும் சமவுடைமையுடன் மதிக்கப்பட வேண்டும்.

எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டது. இரு தரப்பு கடன் வழங்குநர்களுடனான செயற்பாடு வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என விதிக்கப்பட்ட நிபந்தனைக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது. இருப்பி னும்தேசியகடன்மறுசீரமைப்புவிவகாரத்தில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவில்லை.

தனியார் துறையில் தொழில்புரியும் மக் களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் மீது அரசாங்கம் கை வைத்துள்ளது.

இவர்களுக்கான வட்டியைத் தீர்மா னிக்கும் பொறுப்பு மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதான விநியோகஸ்தர்களுக்கு தேசிய கடன் மறு சீரமைப்பு விலக்களிக்கப்பட்டுள்ளமை முற்றிலும் தவறானது.

தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் அரசாங்கத்தின் தீர்மானத்தில் தனியார் ஆரம்ப விநியோகஸ்தர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள்.

பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய மென்டிஸ் மதுபான உற்பத்தி நிறுவனம் கடந்த மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 341 கோடி ரூபா வரி செலுத்தவில்லை.

இதுபோல் பல நிறுவனங்கள் பல கோடி ரூபா வரி செலுத்தவில்லை.இந்த வரியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.வங்குரோத்துக்கு மத்தி யிலும் டீல் கொள்கை செயற்படுத்தப்படுகிறது.

ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அரசாங்கம் குறிப்பிடும் பொய்யை ஏற்றுக்கொள்ள முடியாது.

அட்டை பூச்சிக்கு கடிபட்டு, மழையில் நனைந்து வெயிலில் வாடும் தோட்ட தொழிலாளர்களின் இறுதி சேமிப்பு மீது பலவந்தமான முறையில் கைவைக்கப் பட்டுள்ளது. இவர்கள் தமது குறை களைக் குறிப்பிட முடியாத நிலைக்கு தள் ளப்பட்டுள்ளார்கள்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடந்த இரு நாள்களாக அரசாங்க நிதி தொடர்பான குழுவில் கலந்துரையாடப்பட்டது. ஈ.பி.எப் மற்றும் ஈ.டி.எப் ஆகியவற்றுக்கு ஏற்படுத்த போகும் மாற்றம் தொடர்பில் தம க்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வில்லை என ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றின் தலைவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் 9 சதவீத வட்டிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அரசாங்கம் குறிப்பிடுவதை நம்ப முடியாது. ஏனெனில் இந்த 9 சதவீத வட்டிக்கு எவ்வித சட்ட உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் இந்தக் கொள்கைளை ஏற்றுக்கொள்வது சந்தேகத்துக்குரியதே.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கம் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் இறுதி சேமிப்பை கொள்ளையடிக்கும் தீர்மா னத்துக்குஒத்துழைப்புவழங்கமுடியாதுஎன்ற காரணத்தால் தேசிய கடன் மறுசீரமைக் கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்தோம். - என்றார். (05)

## தம்மால் முடியாததை மற்றவன் செய்யும் போது தடுக்க தகிடு தித்தி தாளம் போடுவது தமிழ்த் தேசியம் அல்ல

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சாட்டை

கடற்றொழில் அமைச் சால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தும் முறையான ஆய்வு களின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுகின்றனவே தவிர, தான்தோன்றித்தனமாகஎவையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, சுயநல சந்தர்ப்பவாதிகளின் கூக்குரல் தொடர்பில் மக்களும் ஊடகங்களும் விழிப்புணர்வுட னும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடை பெற்றதேசியகடன்மறுசீரமைப்பு விடயம்தொடர்பானவிவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

மேலும், 'வடக்கு மாகா ணத்திலே எமது மக்களின் வாழ்வாதாரங்கள் கருதி, ஏற்கனவே ஒரு சிலர் மாத் திரம் பயன்பெற்று வந்திருந்த கடலட்டைப் பண்ணைக் கைத் தொழிலை நாம் பரவலாக்கி இதுவரையில்பலநூற்றுக்கணக் கான தொழில் முயற்சியா ளர்களை உருவாக்கியிருக் கின்றோம்.

'பழையன கழிதலும் புதி யன புகுதலும்' என்ற அடிப்ப டையில் கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மை சார்ந்து நாம் பல்வேறு புதிய திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம். 'கறுப்புத் தங்கம்' எனப்படுகின்ற கடலட்டைப் பண்ணைக் கைத் தொழிலானது எமது மக்களின் பொருளாதாரத்தில் அதீத செல் வாக்கு செலுத்த ஆரம்பித்ததும், சில தமிழ் அரசியல்வாதிகள் முதற்கொண்டு,சிலசுரண்டல்வாதி கள் அதற்கெதிரான கருத்தாடல் களை முன்வைத்து வருகின் றனர்.

மக்களின் அவலங்களுக்கு தூபமிடுபவர்கள், ஆசை காட்டி தமது ஏவலாளர்களைத் தூண்டி விடுகிறார்கள். அதன் மூலம் உயர்ந்த இலட்சிய கோபு ரங்களை உடைத்து வீழ்த்தி குட்டிசுவர்களாக்கி விடலாம் என கனவு காண்கிறார்கள். தம்மால் முடியாததைஅடுத்தவன்செய்தால் அதைத்தடுக்க தகிடு தித்தி தாளம் போடுவது தமிழ்த் தேசியம் அல்ல. நாங்கள் தமிழ் தேசத் தின் விடியலுக்காக நீதியான வழியில் இரத்தம் சிந்தியவர்கள். தமிழ் தேசியத்தை வெறும் தேர்தல் கோசமாக ஒரு போதும் உச்சரித்தவர்கள் அல்லர்.

நாங்கள் அரசியல் யதார்த்த சூழலை உணர்ந்து தேசிய நல்லிணக்க பாதையில் வெளிப்படையாகவே அணிவகுப் பவர்கள், எக்காலத்திலும் அரசுடன் பின் கதவு தட்டி பேசி யவர்கள் அல்லர்.

அல்லது தென்னிலங் கையை தூண்டி விட்டு அதில் குளிர் காய, தமிழர் தேசத்தில் அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள் செய்பவர்களும் அல்லர். மாகாணசபை முறைமையில் இருந்து முன்னோக்கி செல் வதே நடைமுறை சாத்தியம் என்ற எமது தீர்க்கதரிசனத்தை ஏற்றுக்கொண்டது போல், அல்லது – அதை ஏற்க மாட்டோம் ஆனாலும் அதில் பங்கெடுப்போம் என்ற மறைமுக ஆதரவு கொடுப்பது போல்.எல்லா விடயங்களிலும் இதய சுத்தி யோடு செயலாற்ற முன் வாருங் கள்.

விளக்கங்களை கோரும் மக்களுக்கு குழப்பங்களை உரு வாக்குவதை நிறுத்துங்கள்.

சிலதொண்டுநிறுவனப்பிரதி நிதிகளும், விளக்கமில்லாததும் – விளக்கமிருந்தும் விளங்காததும் போன்ற கருத்துக்களை வெளி யிட்டு வருகின்றன.

இவர்கள், தங்களது வாழ் வாதாரங்களை மாத்திரம் கருத்தில்கொள்ளாமல்,மக்களது வாழ்வாதாரங்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்றும், மக்களுக்கு சரியான தகவல்களை வழங்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது மக்களுக்கு நன்மை கள் கிட்டும் போது அதைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களை தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் வைத்துக் கொண்டு, அரசியல் செய்வதும், தமது பிழைப்புகளை முன்னெடுப்ப தும் இவர்களது நோக்கமாக இருக்கின்றது.

நாங்கள் முறை யான ஆய்வுகளுக்கூடாகவே திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அன்றி, தான்தோன்றித் தன மாக எதையும் முன்னெடுப்ப தில்லை. வெளிப்படை யான தன்மை கொண்டவை யாகவே இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடலட்டை, இறால், நண்டு, கடல் பாசி, சிப்பி போன்ற நீர் வேளாண்மைக் கைத்தொழில் களை ஒருவர் மேற்கொள்ள வேண்டுமெனில் முதலில் அவர், அத் தொழிலினை மேற் கொள்கின்ற பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரிடம் அது சார்ந்த கோரிக்கைக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பின்னர் தேசிய நீரியல் வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை(நெக்டா), கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் அடங்கலாக கள ஆய்வு நடத்தப்பட்டு, கடற் றொழில் அமைச்சு அதன் சாதக, பாதகங்ளை ஆய்வு செய்த பின்னரே குறித்த நபருக்கு நீர் வேளாண்மைக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

இதனை விளங்கிக் கொள்ளாமல் சுயலாப அரசிய லுக்காக சிலர் கூக்குரல் இடு வது தொடர்பில் எமது மக் களும் தமிழ் ஊடகங்களும் விழிப் புடனும் பொறுப்புடனும் இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கின்றேன் என நாடாளு மன்றஉரையில்அமைச்சர்டக்ளஸ் தேவானந்தாதெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## மின்சார கட்டணத்தை நூற்றுக்கு 500 வீதம் அதிகரித்து அரசாங்கம் தற்போது சிறு வீதமளவில் குறைத்துள்ளது

சஜித் சாட்டை

அரசாங்கம் மின்சார கட்டணத்தை நூற்றுக்கு 500 வீதம் அதிகரித்து விட்டு தற்போது மிகவும் சொச்சக்கணக்கில் குறைத்துள்ளது. மின் கட்டணம் அதிகரிக்க எடுத்த தீர்மானம் தொடர்பாகத்தெரிவுக்குழுஅமைக் குமாறு நாங்கள் தெரிவித்த பின்னரே இந்த கட்டண குறைப் பையும்மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

என்றாலும் மக்களால் தாங்கிக்கொள்ள முடியுமான தொகைக்கு மின் கட்டத்தை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூட்டமொன்றைமுன்வைத்துமின் கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்குமாறு சபாநாயகருக்கு கையளிக்கப்பட்டுள்ள மகஜர் தொடர்பில்குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

மின் கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் எடுக்கப்பட்ட பிழை– யான தீர்மானம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்குமாறு கடந்த சில வாரங் களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கைச்சாத் திட்டு மகஜர் ஒன்றை கையளித்திருந்தோம். அந்த நடவடிக்கை இன்னும் இடம்பெறாமல் இருக்கிறது. அதனால் தெரிவுக்குழு அமைக் கும் நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கேட டுக்கொள்கிறோம். ஏனெனில் மின்சார பாவனையாளர்களின் மின் கட்டணம் இரண்டு சந்தர்ப் பங்களில் நூற்றுக்கு 500 வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு நூற்றுக்கு 500 வீதம் மின் கட்டணம் அதி கரித்த அரசாங்கம் தற்போது மிகவும் சொச்சக்கணக்கில் மின் கட்டணத்தைக் குறைத்து மின் கட்டணம் குறைப்பு தொடர்பில் பிரசாரம் செய்து வருகிறது.

இந்தசொச்சக்கணக்கிலாவது மின் கட்டணத்தை குறைப்பதற்கு அரசாங்கத்துக்கு மனம் திறக் கப்பட்டது, நாங்கள் தெரிவுக்குழு ஒன்றை அமைக்குமாறு கோரி யதன் பின்னராகும். அதனால் மின்சார கட்டண அதிகரிப்பு தொடர்பில் விரைவாக தெரி வுக்குழுவை அமைக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன். அதனால்இன்னும்மின்கட்டணம் குறைவடையும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.ஏனெனில்மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக மதஸ்தலங்களின் மின்சார கட்டமைப்பு பாதிக்கப் பட்டிருக்கிறது.எனவேஅரசாங்கம் 500வீதமின்சாரகட்டணத்தைஅதி கரித்துவிட்டு,தற்போது மக்களை ஏமாற்றும் வகையில் மிகவும் சொச்சக்கணக்கில் மின்சார கட்டணத்தை குறைக்காமல், மக்களுக்கு தாங்கிக்கொள்ள முடியுமான அளவுக்கு மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். – என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# திறைசேரி உண்டியல்களை பிணையங்களாக மாற்றினால் ரூபா கையிருப்பு நெருக்கடியாகும்

## சம்பிக்க எச்சரிக்கை



திறைசேரி உண்டியல்களை பிணைமுறியங்களாக மாற்றியமைப்பதால் எதிர்காலத்தில் மத்திய வங்கி ரூபா நெருக்கடியை எதிர்கொள்ளும் அதற்கான தீர்வும் மக்கள் மீதே சுமத்தப்படும்.

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மக்கள் மீது சுமை சுமத்தப்பட்டுள்ளமை கவலைக்குரியது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

தேசிய மற்றும் சர்வதேச கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற யோசனையை நான் 2016 ஆம் ஆண்டு அமைச்சரவையில் முன்வைத்தேன்.

வங்குரோத்து நிலை அடைந்ததன் பின்னரே கடன்களை மறுசீரமைக்க தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் சர்வதேச பிணைமுறியாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்கள் மற்றும் அதிக வட்டி வீதத்தில் பெற்றுக்கொண்ட வணிக கடன்கள் என்பன தற்போதைய நிதி நெருக்கடிக்கு ஒரு காரணியாக உள்ளது.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் தேசிய கடன் தவிர்க்க முடியாதது. இருப்பினும் கடன் மறுசீரமைப்பின் போது பொருளாதார வெளிப்பாட்டு கொள்கை சிறந்த முறையில் பின்பற்றப்பட வேண்டும்.

தேசிய கடன்களை மறுசீரமைத்து விட்டோம் என அரசாங்கத்தால் ஒய்வெடுக்க முடியாது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் சர்வதேச அரசமுறை கடன்களை மறுசீரமைத்து இணக்கப்பாட்டு கொள்கை ஒப்பந்தத்தை சர்வதேச நாணய நிதியத்துக்கு முன்வைக்க வேண்டும்.

நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி சமர்ப்பித்துள்ள வருமானம் மற்றும் செலவு தொடர்பிலான அறிக்கை முரண்பட்டதாக உள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்க நிதி தொடர்பான குழுவில் கலந்துரையாட தீர்மானித்துள்ளோம்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தற்போதைய நிதிதரப்படுத்தலுக்கு அமைய மதிப்பிடப்பட்டுள்ள தொகையில் மாற்றம் ஏற்படும்.

கடன் மறுசீரமைப்பின் சுமை நடுத்தர மக்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனியார் நிறுவனங்கள் வசமிருந்த 1.5 ரில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்துக்குள் உள்வாங்கப்படவில்லை.

மறுபுறம் அவர்கள் வசமுள்ள 5 ரில்லியன் பெறுமதியான பிணைமுறிகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவில்லை.

விநியோகிக்கப்பட்டுள்ள திறைசேரி உண்டியல்களை, பிணைமுறிகளாக மாற்றியமைக்க கடன் மறுசீரமைப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் உண்டியல்கள் பிணைமுறியங்களாக மாற்றப்பட்டால் மத்திய வங்கி ரூபா கையிருப்பு நெருக்கடியை எதிர்கொள்ளும் இந்த சூழலை முகாமைத்துவம் செய்ய ஒன்று பணம் அச்சிட வேண்டும் அல்லது நேரடி மற்றும் மறைமுக வரி அறவிடலை அதிகரிக்க வேண்டும். இரண்டு தீர்மானத்தில் ஒன்றையேனும் நடைமுறைப்படுத்தினால் மக்களே பாதிக்கப்படுவார்கள்.

கடன் மறுசீரமைக்கப்படாமல் இருந்திருந்தால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு சுமார் 120 பில்லியன் ரூபா வட்டி கிடைக்கப்பெற்றிருக்கும் அதனை உழைக்கும் மக்களுக்கு பகிர்ந்தளித்திருக்கலாம்.

ஆனால் கடன் மறுசீரமைப்பின் பின்னர் 9 சதவீத வட்டி வீதமே வழங்கப்படும். 2025 ஆம் ஆண்டு முதல் ஈ.பி.எப் நிதியத்தில் இருந்து வருடாந்தம் 60 ஆயிரம் ரூபா இரத்து செய்யப்படும் இதனால் சாதாரண மக்களே மோசமாகப் பாதிக்கப்படுவார்கள்.

பொருளாதாரப்பாதிப்பைத் தீவிரப்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக அப்பாவி மக்கள் மீது கடும் சுமைகள் சுமத்தப்பட்டுள்ளன. இவை முற்றிலும் தவறானது . - என்றார். (05)

# நீதியரசர் நவாஸ் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வரும் வாரத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படலாம்

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான முக்கிய பரிந்துரைகளை உள்ளடக்கிய நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பாக ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச்செய்தல் ஆகிய-வற்றுக்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் ஒய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டச்செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ். மாநகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் அடங்கிய ஆணைக்குழு கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது.

கடந்த இருவருடகாலமாக அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் பல்வேறு தரப்பினர் ஆஜராகி சாட்சியமளித்திருக்கும் நிலையில், அந்த ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகளுக்கு அமைவாகவே தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதுமாத்திரமன்றி, ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவுக்குவந்த நிலையில், அதன் இறுதி அறிக்கை டிசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் அந்த ஆணைக்குழுவுக்கான ஆணை இவ்வாண்டு ஜனவரி 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, பின்னர் ஏப்ரல் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து கடந்த மே மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இறுதி அறிக்கையை அச்சிடும் பணிகளில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக ஆணைக்குழுவால் மே மாத இறுதிக்குள் அறிக்கையை சமர்ப்பிக்கமுடியாத நிலையேற்பட்டது. அதனையடுத்து அதற்கான ஆணை இம்மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, இறுதி அறிக்கையின் தயாரிப்புப் பணிகள் அனைத்தும் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில், எதிர்வரும் வாரத்துக்குள் அவ்வறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, தமது இடைக்கால அறிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பல்லினத்தவரையும், பல்துறைசார் நிபுணர்களையும், பாதிக்கப்பட்ட தரப்பினரையும் உள்ளடக்கிய நம்பத்தகுந்த பொறிமுறையாக அமையவேண்டியது அவசியம் எனவும், ஆணைக்குழுவின் ஆணையாளராக தமிழ் பேசக்கூடிய ஒருவரே நியமிக்கப்படவேண்டும் எனவும் ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் பரிந்துரைக்குமென நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. (05)

# கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளித்தவர்களுக்கு 25 லட்ச மக்களின் சாபம் சென்றடையவேண்டும்

## ஜெபிக்கிறார் சாணக்கியன்



தேசிய கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவாக வாக்களித்த அனைவருக்கும் 25 லட்சம் ஈ.பி.எப் மற்றும் ஈ.டி.எப். உறுப்பினர்களின் சாபம் சென்றடைய வேண்டும். தேசிய கடன் மறுசீரமைப்பு என்பது அரசாங்கத்தின் பிறிதொரு மோசடியாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி முதலாவது மோசடி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தில் நாடு வங்குரோத்து நிலையை அடையும் என அறிந்தும் வெளிநாட்டு கடன் டொலரில் செலுத்தப்பட்டது.

தற்போது கடன் மறுசீரமைப்பு ஊடாக மற்றுமொரு மோசடி இடம்பெறவுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவாக வாக்களித்த அனைவருக்கும் 25 லட்ச ஈ.பி.எப் மற்றும் ஈ.டி.எப். உறுப்பினர்களின் சாபம் சென்றடைய வேண்டும். தேசிய கடன் மறுசீரமைப்பு என்பது அரசாங்கத்தின் பிறிதொரு மோசடியாகும். - என்றார். (05)

# 2021இல் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிக்காதோரே நாட்டின் தற்போதைய நிலைமைக்குப் பொறுப்புக் கூறவேண்டும்

## கபீர் ஹாசிம் கூறுகிறார்



அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பின் வேதனை அனைத்து தரப்பினரும் அவர்களின் சொத்துக்களுக்கமைய தாங்கிக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் ஒரு பிரிவினர் வேதனை அடைவதற்கும் மற்ற பிரிவினர் அதில் இருந்து மீள்வதற்கும் எங்களுக்கு அனுமதிக்க முடியாது.

அத்துடன் 2021 இல் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிக்காதவர்கள் அனைவரும் நாட்டின் இந்த நிலைக்கு பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

2021 டிசெம்பர் மாதம் வரவு செலவு திட்டத்தை நிதி அமைச்சராக இருந்து பஸில் ராஜபக்ஷ சமர்ப்பித்த போது, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டும் இல்லாவிட்டால் நாடு வங்குரோத்து அடையும் என அன்று தெரிவித்தேன்.

இன்று இந்த சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு தாமதித்ததன் விளைவையே இந்த நிலைக்கு காரணமாகும். அன்று வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு இடமளிக்க முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அனைத்து உறுப்பினர்களும் எதிர்த்தனர்.

ஆனால் இன்று இவர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தை மறுசீரமைக்கவும் ஆதரவளிக்கின்றனர் ஆடை அணியாமலே இவர்கள் இதற்கு ஆதரவளிக்கின்றனர்.

அத்துடன் நாங்கள் தெரிவித்தமை போன்று அன்று வெளிநாட்டு கடன் மறுசீமைப்புக்கு சென்றிருந்தால், இந்த நிலை வந்திருக்காது.

கோட்டாபய ராஜபக்ஷ, பீ.பீ. ஜயசுந்தர, பசில் ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரே இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கொலை செய்தனர்.

இவர்களை பொருளாதார கொலையாளிகள் என அழைக்க முடியும். இன்று இவர்களின் வங்கி கணக்குகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளில் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அன்று வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிக்காத அனைவரும் இந்த நிலைக்கு பொறுப்புக்கூற வேண்டும். அத்துடன் இந்த கடன் மறுசீரமைப்பின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு வரவு வைக்கப்படும் 9 வீத வட்டியை அரசாங்கத்துக்கு உறுதிப்படுத்த முடியுமா என கேட்கிறேன்.

கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதாக இருந்தால் அனைத்து துறைகளிலும் சமமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பாதகமான தீர்மானங்களை எடுப்பது அநியாயமானதாகும். வங்கி உரிமையாளர்களின் கோடிக்கணக்கான வளங்களை அரசாங்கம் பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. எனவே கடன் மறுசீரமைப்பின் வேதனையை நாட்டில் அனைத்துத் தரப்பினரும் அவர்களின் சொத்துக்கமைய ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஒரு தரப்பினர் வேதனை அடைவதற்கும் மற்றவர்கள் அதில் இருந்து மீள்வதற்கும் எங்களுக்கு அனுமதிக்க முடியாது. அது நியாயமும் இல்லை. - என்றார். (05)

# அரசின் பிறிதொரு மோசடிக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம்

## சாடுகிறார் உதய கம்மன்பில



அரசாங்கத்தின் பிறிதொரு மோசடிக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்திட்டம் தொடர்பில் சட்டமா அதிபர் திறைசேரிக்கு முன்வைத்த பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான சகல அதிகாரங்களும் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தேசிய கடன் மறுசீரமைப்பு தீர்மானத்துக்கு தாம் ஏன் வாக்களித்தோம் என்பதை பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அறியாமல் உள்ளார்கள். நாடாளுமன்ற பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு அமைய செயற்படுகிறார்கள்.

தேசிய கடன் மறுசீரமைப்புக்கான தீர்மானங்கள் எடுக்கும் சகல அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கடன் எந்த வகையில் மறுசீரமைக்கப்படும் என்பது தொடர்பான திட்டம் அமைச்சரவை கொள்கை பத்திரத்தில் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும் என சட்டமா அதிபர் கடந்த மாதம் 27ஆம் திகதி திறைசேரியின் செய லாளரிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித சட்ட உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் இந்த பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும்.

அரசாங்கத்தின் பிறிதொரு மோசடிக்கு அமைச்சரவை ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய வளங்களை பாதுகாக்கும் பொதுஜன பெரமுனவின் கொள்கையை ஜனாதிபதி இல்லாதொழிக்கிறார். நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பு எதிர்வரும் காலங்களில் பாரிய மாற்றம் ஏற்படுத்தும். - என்றார். (05)

# தமிழர் விவகாரத்தில் இந்தியா செயற்படவேண்டிய விதம் தொடர்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம்



வெகுவிரைவில் ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், தமிழர் விவகாரத்தில் இந்தியா செயற்படவேண்டிய விதம் தொடர்பாகத் தெளிவுபடுத்தி இந்தியாவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைக்க இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 20ஆம் திகதி இந்தியா செல்லவிருக்கிறார் எனவும், 21ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவிருக்கிறார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ள பின்னணியிலேயே, முக்கிய தமிழ் தேசிய கட்சிகளில் ஒன்றான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் வேண்டாம் எனவும், அதனை இந்தியா வலியுறுத்தக்கூடாது எனவும் தொடர்ச்சியாகக் கூறிவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் மாத்திரமே தீர்வு காண முடியும் என்றும், அதன் அடிப்படையிலேயே பேச்சுகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது. இவ்வாறானதொரு பின்னணியில் ஏற்கனவே இந்திய வெளி யுறவுத்துறை அமைச் சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது இது தொடர்பாக அவரிடம் எடுத்துக்கூறியதாகவும், 'இந்திய - இலங்கை ஒப்பந்தம் வேறு, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் வேறு' என்ற விடயத்தை விசேடமாக சுட்டிக்காட்டியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்திய - இலங்கை ஒப்பந்தம்தான் இந்தியாவின் நேரடித்தலையீட்டின் மூலம் உருவாக்கப்பட்டது என்றும், 13ஆவது திருத் தம் என்பது அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகிறோம் என்ற பேரில் இலங்கை அரசாங்கத்தால் ஒருதலைப்பட்சமாக தயாரிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 13ஆவது திருத்தம் தமிழர்களைப் பாதிப்பதாலேயே அதனை நிராகரிப்பதாகவும், மாறாக, இந்தியாவைத் தாம் ஒருபோதும் பகைக்கவோ அல்லது எதிர்க்கவோ இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் வெகுவிரைவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அதற்கு முன்பாக 13 ஆவது திருத்தம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியும், தமிழர் விவகாரத்தில் இந்தியா செயற்படவேண்டிய விதம் பற்றிய தமது அபிப்பிராயம் குறித்து விளக்கமளித்தும் கடிதமொன்றை அனுப்பிவைக்க இருப்பதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM
FAAST-F2T
80-85 KM
FREEDOM
70-75 KM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

# சிறைச்சாலை உத்தியோகத்தரை மண்டியிடச் செய்து தாக்கிய சம்பவம்; இராணுவக் கப்டனுடன் பிரதான சந்தேகநபரும் நுவரெலியாவில் கைது

நுவரெலியா கிரிகோரி ஏரிக்கு அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பதுங்கியிருந்தபோது, மூன்று துப்பாக்கிகள் மற்றும் ரவைகளுடன் இராணுவ கப்டன் மற்றும் மினுவாங்கொடை தாக்குதலின் பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து கார் மற்றும் ஒரு வானும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

கடந்த மே மாதம் 12 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் மினுவாங்கொட ராஜசிங்கபுர சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற சந்தேக நபர்கள் அவரை மண்டியிடச் செய்து துப்பாக்கியால் தலையில் தாக்கியுள்ளனர்.

இதன்போது சிறைச்சாலை அதிகாரியின் சகோதரி மற்றும் தாயார் மீதும் சந்தேக நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின்போது மற்றுமொரு நபர் கையடக்கத் தொலைபேசியில் வீடியோ பதிவு செய்து வெளிநாட்டில் உள்ள பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவருக்கு அனுப்பியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தரை தாக்கிய சம்பவம் தொடர்பில் பண்டாரவத்தை பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய ஒருவரும் ஹெயன்துடுவ தலுக்கல வீதியை சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குஉட்படுத்தப்பட்டனர் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (05)

## தமிழர்களின் பூர்வீகக் கிராமத்தில் முளைத்த புதிய விகாரை திறப்பு




வவுனியா வடக்கில் தமிழர்களின் பூர்வீகக் கிராமமான கச்சல் சமளங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய விகாரை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் பகுதி என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிர மிக்கப்பட்ட பகுதியில் இந்த விகாரையின் நிர்மாணப்பணிகள் இடம்பெற்றன.

1980ஆம் ஆண்டுவரை வாழ்ந்துபோரின் காரணமாக தமிழர்கள் இடம்பெயர்ந்த நிலையில் இக் கிராமத்தில் தொல்லியல் அடையாளம் எனக் கூறப்பட்டு தமிழர்கள் தடுக்கப்பட்டு வந்தனர்.

அவ்வாறான பகுதியிலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டு நிறைவுபெற்று திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகப் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் பள்ளமடுவில் இருவர் கைது



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு வீதியில் வைத்து சனிக்கிழமை மாலை 85 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற போது ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 35 வயதுடைய மன்னார் பேசாலை, மற்றும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப் பற்றப் பட்டுள்ளன.

மேலதிக விசாரணைக்காக சந்தேக நபர்களும், மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள், வாகனம், மோட்டார் சைக்கிள் ஆகியவை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. (05)

## மத்திய மலைப் பகுகளில் கன மழை: விமலசுரேந்திர நீர்த்தேக்கம் நிரம்பியது



மலையகத்தின் மேற்கு சரிவுப் பகுதிகளில் நேற்று காலை முதல் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நோர்டன்பிரிட்ஜ் பகுதிகளில் பெய்தகடும்மழைகாரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கம் காலை முதல் நிரம்பி வழிவதாக நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

கனமழை காரணமாக ஹற்றன் - நுவரெலியா, ஹற்றன் - கொழும்பு பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்பட வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, அவ்வீதிகளில் வாகனங் களை செலுத்தும் போது கவனமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். (05)

## அருட் தந்தை விக்டர் சோசை உட்பட 3பேர் விபத்தில் காயம்



மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, இசைமாளத் தாழ்வு பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை இடம்பெற்ற விபத்தில் மன்னார் மறைமாவட்டத்தின் முன்னால் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்களாக மூவர் காயமடைந்துள்ளனர்.

மடுதிருத்தலத்தின் ஆடிமாத திருவிழா திருப்பலி நிறைவடைந்த நிலையில் நேற்று மாலை அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய மூவரும் மடு திருத்தலத்தில் இருந்து மன்னார் நோக்கி ஹயஸ் ரக வாகனத்தில் பயணித்துள்ளனர்.

அவர் பயணித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் அருகில் உள்ள கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதன் போது காயமடைந்த மூவரும் உடனடியாக அம்பியூம்புலன்ஸ் மூலம் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

தற்போது அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்களாக மூவரும் சிறு காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன. விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

## இலங்கை - இந்திய இடையிலான பயணிகள் கப்பல் சேவையை தொடங்குவது தாமதமாகும்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை மேலும் தாமதமாகும் என இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, புதுச்சேரியின் காரைக்கால் மற்றும் யாழ். காங்கேசன் துறைதுறைமுகங்களுக்கு இடையேயான பயணிகள் கப்பல் சேவை ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் படகு சேவைக்காக தேர்வு செய்யப்பட்ட துறைமுகம் மாற்றப்பட்டதால், இந்த பயணிகள் கப்பல்சேவைதாமதமாகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பயணிகள் கப்பல் சேவைக்காக, தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் வசதிகளை அதிகரிக்க இந்தியா மேலும் கால அவகாசத்தை கோரியுள்ளது.

இந்நிலையில் குறித்த சேவையில் தாமதம் ஏற்படலாம் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை மேற்கோள் காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2023இல் வெளியிடப்பெற்றது.